பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 25 வெள்ளிக்கிழமை (09-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:227

# கருணா குழு பதுங்க இடமளித்த விகாரை மீது நேற்று கிரனேட் வீச்சு!

## பொலீஸ்நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு

கொழும்பு,ஜூலை9

கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து தலைநகரிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நகரிலுள்ள பொலீஸ் நிலையங்களில் விசேட

(16ஆம் பக்கம் பார்க்க)

## விகாராதிபதி படுகாயம்; ஹிங்குராகொடவில் சம்பவம்

கொழும்பு,ஜூலை9

**ஹிங்குராகொடவிற்கு அருகில் உள்ள புபுல பௌத்த விகாரை மீது நேற்று இரவு 8மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சில் அந்த விகாரையின் விகாராதிபதி வண.கெடிகமுவே சுகததேரர் படுகாயமடைந்தார். அவர் அவசர அவசரமாகக் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.**

**கருணா குழுவினர் 14பேர் பயங்கர ஆயுதங்களுடன் இந்த விகாரையில் பதுங்கியிருந்த சமயமே கடந்த திங்களன்று மாலை பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.**

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கொடுக்கப்பட்ட விடாப்பிடியான அழுத்தம் மற்றும் நெருக்கடியால் இந்த 14 பேரையும் பிணையில் செல்லக் கூடியதாக நீதிமன்றத்தில் பொலீஸார் கண் துடைப்பு நாடகம் ஒன்றை ஆடினர் என்பது தெரிந்ததே.

போதிக்காராமய என்று அழைக்கப்படும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுதாரிக்கு மழையில் ஒதுங்கத் தன் குடையில் இடம்கொடுத்த பெண்ணே கைது!

### ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பணியாற்றியவராம்

கொழும்பு,ஜூலை9

கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பாக தற்போது கைது செய்யப்பட்டுள்ள பெண்மணி முன்னர் ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகத்தில் தேர்தல் காலத்தில் பணியாற்றியவர் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சத்தியலீலாவதி (வயது 26) என்பவரே கைது செய்யப்பட்டு பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது கட்சியின் யாழ்.அலுவலகத்தில் இந்தப்பெண் பணியாற்றினார் எனவும், இதன் காரணமாக ஈ.பி.டி.பி.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புப் பாதுகாப்புக் குறித்து பொலீஸ் அதிகாரிகள் ஆராய்வு

கொழும்பு,ஜூலை9

கொழும்பு நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் மேலதிக பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பாக நேற்றுப் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தலைமையிலான உயர் பொலீஸ் அதிகாரிகளின் முக்கிய மாநாடு பொலீஸ் தலைமையகத்தில் நடைபெற்றது.

கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து கொழும்பு மாவட்டத்தில் பணியாற்றும் உயர் பொலீஸ் அதிகாரிகள் அனைவரும், பொலீஸ் தலைமையகத்துக்கு நேற்று அழைக்கப்பட்டு இந்த அவசர மாநாடு நடத்தப்பட்டது.

கொழும்பு நகரின் முக்கிய இடங்களில் இராணுவத்தினரும் பொலீஸாரும் காவற்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரும் முக்கிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## கருணா அணியின் இருவருக்கு மட்டக்களப்பில் மரண தண்டனை!

மட்டக்களப்பு,ஜூலை9

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய சமயம் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த இருவருக்கு நேற்று நண்பகல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்துப் பயங்கர ஆயுதங்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டவர்கள் எனக் கருதப்படும் நால்வில் இருவருக்கே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கறுப்புத் துணியால் கண்கள் கட்டப்பட்டு, காலில் விலங்குகள் போடப்பட்ட நிலையில் இலுப்பையடிச் சேனைப் பகுதியில் இந்த இருவரின் சடலங்களும் காணப்பட்டன.

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் இவர்கள் இருவரும் முன்னர் கிளைமோர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் இடங்களிலேயே அவர்கள் இருவரினதும் சடலங்கள் நேற்றுப் போடப்பட்டிருந்தன.

இலுப்பையடிச் சேனையைச் சேர்ந்த பால

(16ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிளின் பின்னாலிருந்து தலையடிபட வீழ்ந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

விறகுடன் சென்ற சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிளில பின்புறமிருந்து பயணித்த குடும்பப் பெண் ஒருவர் விறகுடன் கொழுவுப்பட்டு தலையடிபட விழுந்ததில் உயிரிழந்தார்.

நேற்று நண்பகல் இணுவில், காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் டச்சு வீதி, மானிப்பாயைச் சேர்ந்த பத்மநாதன் பத்மாவதி (வயது52)என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த இவரது கணவர் கனகசபை பத்மநாதன் (வயது52) காயமடைந்தார். நல்லூரில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றிற்காக இவர்கள் சென்று கொண்டிருந்ததாகவும்-அவ்வேளை, இணுவில், காங்கேசன்துறைவீதியில் விறகுடன் வந்த சைக்கிள் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டவேளை விற

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் திடீர்த் தேடுதல்: 13 இலங்கைத் தமிழர்கள் லண்டனில் நேற்றுக் கைது!

### கத்திகள், வாள்கள், பணம் என்பன மீட்பு!

லண்டன்,ஜூலை9

லண்டனில் வாழும் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் மறைந்துள்ள சந்தேகத்திற்குரிய குற்றக் குழுக்களை இலக்குவைத்து நேற்று வியாழனன்று நடத்தப்பட்ட தேடுதலின்போது 13 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரிட்டிஷ் பொலீஸார் தெரிவித்துள்ளனர். கைதான அனைவரும் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

லண்டனில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் தங்கியிருக்கும் 20 இற்கும் மேற்பட்ட வீடுகளில் பொலீஸார் திடீர் சோதனை நடத்தி இந்த 13 இளைஞர்களையும் கைது செய்தனர். இவர்களிடமிருந்து மாற்றியமைக்கப்பட்ட துப்பாக்கிகள்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணோடு தவறாக இருந்தேனா? குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறார் பிரதம நீதியரசர்

கொழும்பு,ஜூலை9

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு9 மணியளவில் நாடாளுமன்ற மைதானத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றுக்குள் இளம் பெண் ஒருவருடன் இசகுபிசகான நிலையில் தாம் இருந்ததை பொலீஸ் அதிகாரி ஒருவர் கண்டார் என்று கூறப்படுவதை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அடியோடு மறுத்துரைத்திருக்கின்றார். அப்படிக் கூறுவது தவறானது; அடிப்படை ஏதுமற்றது என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

"இது முற்றிலும் தவறான விவகாரம். இவ்விடயம் குறித்து எனக்கு எதுவுமே தெரியாது" - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

குறிப்பிடப்பட்ட நாளிலும் வழமையான வேலை நாள்களைப்போல கொழும்பு ஹல்ஸ்டோர்பபில் உள்ள உயர் நீதிமன்றக் கட்டட வளாகததில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் பற்றிய சர்ச்சை: விசாரணைக்கு ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு,ஜூலை9

பிரதம நீதியரசரின் நடத்தை தொடர்பாகக் கிளப்பப்பட்டிருக்கும் சர்ச்சை குறித்து நீதி விசாரணை ஒன்றுக்கு கோரியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி.

இவ்விடயம் தொடர்பாக அக்கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

நாட்டின் நீதித்துறையின் உயரதிகாரியான பிரதம நீதியரசர் பத்திரிகைகளுக்கு வழங்கிய தகவல்களில் தமக்கு எதிராக அவதூறுப் பிரசாரத்தை ஏற்படுத்தத்தக்க வகையில் சில விடயங்கள் பொலீஸாரின் பெயரால் முன்வைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு, அது குறித்து கவனிக்கும்படி பொலீஸ்மா அதிபரை வேண்டியுள்ளார்.

தங்களுக்குக் கிடைத்த தகவலின்படி அன்றைய தினம் அங்கு முறையற்றவிதத்தில் நடமாடிய ஜோடியில் பிரதம நீதியரசரும் இருந்தார் எனப் பொலீஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், பிரதம நீதியரசரினால் முன்வைக்கப்பட்ட கருத்து உண்மையானால் பொலீ

(16ஆம் பக்கம் பார்க்க)



கூடுதலாகப் பணத்தைச் சேர்க்க...

தேசேவ 2 வருடகால நிலையான வைப்பில் அதிகூடிய வட்டியான 7.75% வழங்குகிறது. பாதுகாப்பான முறையில் பணத்தைச் சேர்ப்போம்.

வருடாந்த விளைவு வட்டி: 7.47%

NSB

PHOENIX O&M 0997

### பயங்கர ஆயுதங்களுடன் பிடிபட்டவர்களுக்குப் பிணையா?

# ஜனாதிபதியின் கூட்டு அரசால் சமாதானத்துக்கே சாவுமணி!

## கடுமையாகச் சாடுகின்றது ஐ.தே.மு.

கொழும்பு,ஜூலை9

ஜனாதிபதியின் ஸ்ரீல.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு அரசு சமாதான முன்னெடுப்புகளுக்கு சாவுமணி அடித்துவிட்டு மீண்டும் ஒரு யுத்தத்தை ஏற்படுத்தவே முனைகின்றது. ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருக்கும்போது நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிட்டது.

"ஹிங்குராகொடையில் பயங்கர ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட 14 தமிழ் இளைஞ்களை இந்த அரசு சாதாரணமாக விடுதலை செய்துள்ளது. இவர்கள் கருணாவின் ஆள்கள் எனத் தெரிந்தும் இராணுவத்தினரின் பலவந்தத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எங்கு சென்றார்கள்? விசாரணைக்காக இவர்கள் மீண்டும் நீதிமன்றுக்கு வருவார்களா? கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் யார்?

ஜனாதிபதியும் அவரின் அரசுமே இவற்றுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்- ஐக்கிய தேசிய முன்னணி இவ்வாறு குற்றம் சாட்டுகின்றது.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க, டாக்டர் ராஜித சேனாரத்ன ஆகியோரே இவ்வாறு குற்றம் சுமத்தினர்.

ஜனாதிபதி 1994ஆம் ஆண்டுகளின் நிலைக்கே நாட்டை மீண்டும் கொண்டு செல்லப்பார்க்கின்றார்.

எதைச் சொல்கிறோம், எப்படிச் சொல்கிறோம என்று தெரியாமல் அவர் கொட்டித் தீர்க்கின்றார்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சியின் போது 41 ஆயிரம் படையினர் இறந்தனர் அல்லது காணாமற்போயுள்ளனர்.

ஆனையிறவுப் படைமுகாமில் ஆயிரத்து 700 பேர் கொல்லப்பட்டனர். மேலும் எட்டு பாரிய இராணுவ முகாம்களைப் புலிகளிடம் இழந்தோம்.

புலிகளிடம் எல்லா முகாம்களையும் இழந்து விட்டாலும் பாதகமில்லை. அங்கே உயிரோடு சிக்கியுள்ள 38 ஆயிரம் இராணுவத்தினரையும் கொழும்புக்குக் கொண்டுவர உதவுங்கள் - என நமது ஜனாதிபதி இந்தியாவிடம் மண்டியிட்டார். இவ்விடயத்தில் இந்தியா உதவி செய்திருந்தால் அப்போதே தமிழீழம் உருவாகி இருக்கும். தெய்வாதீனமாக இந்தியா உதவமுன்வரவில்லை.

வடக்கே இவ்வளவு இழப்புக்கள் ஏற்பட்ட வேளையில் கொழும்பில் மத்திய வங்கியும், விமான நிலையமும் தகர்க்கப்பட்டன.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க பிரதமரான பின் ஒரு படையினராவது கொல்லப்படவில்லை; முகாம்களை நாம் இழக்கவில்லை.

தனிநாட்டைத்தவிர வேறு மார்க்கம் இல்லை என்று பிடிவாதமாக இருந்த விடுதலைப் புலிகளைச் சமாதான மேசைக்கு வரவைத்தோம். தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடச்செய்தோம்.

ஆனால், இப்பொழுது ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் சமாதான முன்னெடுப்புக்களுக்கே சாவுமணி அடித்துவிட்டனர்.

இரண்டு வருட அமைதிக்குப் பின்னர் இப்போது நாட்டில் மீண்டும் யுத்த பீதி ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொல்ல ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே திட்டமிட்டு கொழும்பில் தங்கியுள்ளனர். அவ்வாறு பதுங்கி இருந்த இவர்கள் தான் டக்ளஸ் தேவானந்தாவை சதி வைத்துள்ளனர். அவர் தப்பிக்கொண்டார்; பொலீஸார் சிக்கிக் கொண்டனர் என ஜே.வி.பி. விமல் வீரவன்ஸ கூறினார்.

டக்ளஸ் தேவானந்தாவைக் கொலை செய்வதாயின் ஒன்றரை வருடங்களாகக் காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. நொடிப்பொழுதில் முடித்துவிடுவார்கள். ஜே.வி.பியோ மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப்போட முயல்கின்றது.

கிராண்ட்பாஸ் பகுதியில் தற்கொலை அங்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டபோது தீவிரவாதிகள் மூன்று மாதங்களுக்குள் இங்கு ஊடுருவியுள்ளனர் எனக் குற்றப்புலனாய்வுத் துறையினர் அரசுக்கு அறிவித்துள்ளனர். ஆனால், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இங்கே குண்டு வெடிப்பில் பொலீஸார் கொல்லப்பட்டது தான் மிச்சம்.

எங்களுடைய ஆட்சியின் போது வடக்கு-கிழக்கில் புலிகள் எந்தவொரு புதிய பொலீஸ் நிலையத்தையும் அமைக்கவில்லை. ஆனால், இப்போது மூன்று புதிய பொலீஸ் நிலையங்களைத் திறந்துள்ளனர். பொலீஸ் வைத்தியசாலையையும் திறக்கின்றனர்.

இவை தமிழீழ பொலீஸ் மா அதிபர் நடேசனால் பத்திரிகைகள் மூலம் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ள விடயங்கள்.

அப்போது விதண்டாவாதம் பேசிய ஜே.வி.பி. இன்று வாயை மடக்கிக் கொண்டிருப்பது ஏன்? என்றும் ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பினார்.

கருணா விவகாரத்தில் இராணுவத்தின் ஒரு பகுதியினர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என அமைச்சர் மங்கள சமரவீரவே ஒப்புக்கொண்டிருக்கின்றார். கருணாவின் சகாக்கள் எனத்தெரிந்தும் பயங்கர ஆயுதங்களுடன் பிடிபட்ட 14 பேரை சாதாரணமாக விடுதலை செய்துள்ளனர்.

இந்தநிலையில், மூன்றாவது சக்தி நாட்டில் குழப்பநிலையை ஏற்படுத்துகின்றது எனக் கதைவிடுகின்றனர். யார் அந்த மூன்றாது சக்தி?

கருணாவைப் பயன்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்த முயலும் இந்த அரசு ஒருபோதும் சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்கப் போவதில்லை. எனவே, நாட்டு மக்கள் இன, மத, மொழி பேதமின்றி ஒன்றிணைந்து இந்த அரசுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் - எனவும் ராஜித சேனாரத்ன கூறினார். (க)

# மருத்துவபீட மாணவியின் போராட்டம்: தீர்வுகாணக் குழு அமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜலை9

யாழ் பல்கலைக்கழக மாணவி கி.புஷ்பமாலாவின் கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வுகாணக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் கலாநிதி என்.புஷ்பரட்ணம் நேற்றுப்பிற்பகல் பல்கலைக்கழகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் முன்னிலையில் இடம்பெற்ற இச் செய்தியாளர் சந்திப்பில் பிரதிப் பிரதம மாணவர் ஒழுக்க மேலாளர் ஐ.ஈ.சந்திரசேகரம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கு சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கூறியதாவது:-

மருத்துவபீட மாணவி கி.புஷ்பமாலாவின் கோரிக்கைகள் தொடர்பாக் இன்று (நேற்று வியாழக்கிழமை) முற்பகல் கூட்டம் இடம்பெற்றது. துணைவேந்தர் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் பதில் மருத்துவப் பீடாதிபதி கலாநிதி செல்வி வி.அரசரட்ணம், மருத்துவபீட விரிவுரையாளர் கலாநிதி டி. குணராஜசிங்கம், பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் ஜெ.ஜெயக்குமார், மருத்துவபீடப் பதிவாளர் எஸ்.கந்தசாமி, சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி ந.புஷ்பரட்ணம், மார்ஷல் ஐ.ஈ.சந்திரசேகரம், மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார், மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆர்.விமலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சம்பந்தப்பட்ட மாணவியின் கோரிக்கைகள் தொடர்பில் சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்கு குழு ஒன்றை அமைப்பதென்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப் படவுள்ளோர் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது. அனைத்துப் பீடங்களின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பேரவை உறுப்பினர்கள் உட்படப் பல்கலைக்கழகச் சமூகத்திலிருந்து இக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். மாணவியின் சார்பில் மாணவர் ஒன்றியம், மருத்துவபீட மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், மாணவி கி.புஷ்பமாலாவும் பார்வையாளர்களாக அனுமதிக்கப்படுவார்கள்.

மாணவியின் 4 கோரிக்கைகளுக்கு கொள்கையளவில் தீர்வை நெருங்கியுள்ளோம். விடைத்தாள் மீள்பரிசீலனை தொடர்பாகவே ஆராயப் படவேண்டியுள்ளது. ஆகவே, விரைவில் சுமுகத் தீர்வை எட்டிவிடமுடியும் என்று நம்புகின்றோம் - என்றார் அவர்.

இதேவேளை -

பாதிக்கப்பட்ட மாணவியின் பரீட்சைப் பெறுபேறுகள் மீள்பரிசீலனை செய்யப்படுவதை மருத்துவபீட துறைத்தலைவர்கள் தடுத்துவிட்டார்கள் என்ற சாரப்பட நேற்று (08.07.2004இல்) வெளியான தகவல் உண்மையல்ல என்றும்-

மேற்படி மாணவியின் பரீட்சைப் பெறுபேற்றினை மூதவையின் பரிந்துரையுடன் மீள்பரிசீலனை செய்யப்படுவதையே மருத்துவபீடத் துறைத்தலைவர்கள் சிபார்சு செய்தனர் என்றும்-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5-6)

# குழுவின் செயற்பாடு ஆரம்பிக்கும்வரை மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடரும்

## மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை9

மருத்துவபீட மாணவி கி.புஷ்பமாலாவின் கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண பல்கலைக்கழக நிர்வாகம் அமைத்துள்ள குழுவின் செயற்பாடு ஆரம்பிக்கும்வரை அனைத்துப் பீடங்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும்.

- இவ்வாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார் தெரிவித்தார்.

முன்னதாக மருத்துவபீட மாணவியின் பிரச்சினை குறித்து நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அனைத்துப்பீட மாணவர்களுக்குமான கலந்துரையாடல் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் மருத்துவபீட மாணவி இ.புஷ்பமாலாவின் கோரிக்கைகளை மருத்துவபீட நிர்வாகம் ஏற்கவேண்டும் என்றும் -

அதுவரை அனைத்துப்பீட மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பர் என்றும் - முடிவெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மருத்துவபீட மாணவியின் விவகாரம் குறித்து ஆராயக் குழு ஒன்றை அமைக்க பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்தது. இக்குழுவின் செயற்பாடு ஆரம்பிக்கும்வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.(ஐ9)

# தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி புதிய யுக்தியில்-தினுசில்-தயாரிப்பு

கொழும்பு,ஜூலை9

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குள் நேற்றுமுன்தினம் வெடித்த தற்கொலைக் குண்டுதாரியின் குண்டுதாங்கிய அங்கி, புதிய யுக்தியைப் பயன்படுத்தி - வழமையான அங்கிகளைவிட மிகச் சிறிய அளவில் - அதை அணிந்திருப்பவரின் வெளிஉடற் தோற்றத்தில் சந்தேகம் எதையும் ஏற்படுத்தாத தினுசில் - தயாரிக்கப்பட்டிருந்ததாம்.

மேற்படி அங்கியை அணிந்திருந்த தற்கொலைக் குண்டுதாரியின் நடமாட்டம் குறித்து பொலீஸாருக்கு சந்தேகம் ஏற்பட்ட போதிலும், அவரது உடையின் தோற்றத்தில் - வெளிப் பார்வையில் - குண்டு தாங்கிய அங்கி எதனையும் உள்ளே அவர் அணிந்திருந்தார் என்ற ஐயம் ஏதும் பொலீஸாருக்கு பெரிதாக ஏற்படவில்லை என்று கூறப்படுகின்றது.

அதனால்தான் பொலீஸ் நிலையத்துக்குள் வைத்தே ஆரவாரப்படாமல் வழமையான விசாரணை நடவடிக்கைக்கு அந்தப் பெண்ணையும் பொலீஸார் உட்படுத்தினர் என்று கருதப்படுகின்றது.

தற்கொலைக் குண்டுதாரியைப் பெண் பொலஸார் உடர்சோதனையிட முயன்றபோதே குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்தார் என்று கூறப்பட்டது. அந்தக் குண்டுவெடிப்பில் தற்கொலைக் குண்டுதாரியும் உடல்சிதறிப் பலியானார். ஆனால் உயிரிழந்தவர்களில் பெண் பொலீஸார் எவரும் இல்லை.

தற்கொலைக் குண்டுதாரியும் அருகில் இருந்த வேறு நான்கு ஆண் பொலீஸாரும் உயிரிழக்கக் காரணமான அந்தக் குண்டு வெடிப்பை - தனது உடலை பெண்பொலீஸார் சோதனையிட்ட சமயமே அந்தத் தற்கொலைக குண்டுதாரி இடம்பெறச் செய்திருந்தால் - அருகில் அவரது உடலைச் சோதனையிட முயன்ற பெண் பொலீஸார் தப்பியது எங்ஙனம் என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனவே உடலைச் சோதனையிடுவதற்கு பெண் பொலீஸார் தம்மை நெருங்க முன்னரே தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்தாரா? அல்லது அவரைச் சோதனையிட முயன்றது பெண் பொலீஸார் இல்லையா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

மேற்படி தற்கொலைக் குண்டுதாரி அணிந்திருந்த அங்கி புதிய வடிவமைப்பில் அமைந்திருப்பது புலனாய்வு அதிகாரிகள் மத்தியில் புதிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய தாக்குதல்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருப்பதுடன் இந்த விடயத்தில் மேலும் சிரத்தை எடுக்கவேண்டிய தேவையை அதிகாரிகளுக்கு அது ஏற்படுத்தியிருப்பதாக் கூறப்படுகிறது.

இந்த அங்கி வழமையாக விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தும் வெடிகுண்டின் சக்தியைவிட குறைந்த சக்தியுடைய வெடிபொருள்களையே கொண்டிருந்தது என இரசாயனப் பகுப்பாய்வாளர் டபிள்யூ. பி.குணதிலக தனது விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

எனினும் அது எதிர்க்கு அதிகளவு சேதத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-3)

## இன்றுமுதல் 'ஞானசௌந்தரி'

யாழ். திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'ஞானசௌந்தரி' என்ற இசை நாடகம் இன்று மன்ற அரங்கில் மேடையேறுகிறது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்களும் தினமும் இரவு 7மணிக்கு இந்த இசை நாடகம் இடம்பெறும்.

கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் யாழ். நகரில் மேடையேற்றப்பட்ட இந்த இசைநாடகம் ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றிருந்தது.

கலை ஆர்வலர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். திருமறைக்கலாமன்றம் மீண்டும் இந்த இசைநாடகத்தைத் தயாரித்து மேடையேற்றுகின்றது.

ஆசனங்களுக்கான பதிவுகளை மன்ற அலுவலகத்துடன் தொடர்புகொண்டு முற்கூட்டியே மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## அரங்க மாணவர் கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் அனைத்துவருட மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அரங்க மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு வெறுவெளி அரங்க நிர்வாகக் குழு கேட்டிருக்கிறது. (ஐ)

# உதயன்

## சமாதான வேளையில் பறிபோகும் தாயக மண்

★ திருகோணமலையில் பாலம்பட்டாறு பாலத்துக்கு அருகில் உள்ள - ஈழத்து சைவமக்களின் புனித மத வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான - பிரபலமான - பத்தினி அம்மன் கோயிலுக்கு நேரெதிரில் - தமிழர்களுக்குச் சொந்தமான காணியில் பௌத்த விகாரை ஒன்றை பலவந்தமாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

★ தம்பலகாமத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் உள்ள விளாங்குளம் என்ற தமிழ்க் கிராமத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான காணியில் பௌத்த கோயில் ஒன்று கட்டப்படுகின்றது.

★ திருகோணமலை, பாலம்பட்டாறுக்கு வடக்கே, விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் தொழிலாகக் கொண்ட தமிழர்களின் பூர்வீகக் கிராமங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் அவர்கள் தமது கால்நடைகளின் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தும் காணிகளில் ஆயிரம் ஏக்கரை, அந்தப் பிரதேசத்திலிருந்து சுமார் பத்துக் கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள இலங்கைக் கடற்படையினரின் பாவனைக்கென அரசு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றது.

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம்.

சமாதான சகவாழ்வுக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் இந்தச் சமயத்தில், இத்தகைய நடவடிக்கைகள் வெவ்வேறு இனங்களிடையே முறுகல்நிலையை மோசமடைய வைத்துச் சமாதான எத்தனங்களில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

தமிழர் தாயக எல்லைப் பிரதேசங்களை - அவர்களின் பாரம்பரிய பூமியை - திட்டமிட்ட அடிப்படையில் ஆக்கிரமிக்கும் பேரினவாதப்போக்கு கடந்த ஐந்து தசாப்த காலமாக முழு மூச்சாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஈழத் தமிழரின் இனஉரிமைக் கோரிக்கை இப்படி விடுதலைப் பாதைக்குத் திரும்பி, இத்தகைய உக்கிர யுத்த வடிவை எடுத்ததற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்த ஏதுக்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற சதி முக்கியமானது என்பது குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயமன்று.

தமிழர்களின் சொந்தப் பிரதேசங்களில் இருந்து அவர்களைத் துரத்தி, அங்கு திட்டமிட்ட வகையில், சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு, தமிழர் தாயகத்தைத் துண்டாக்கி, கபளீகரம் செய்யும் பேரினவாதப் போக்கு இதற்காகப் பல உத்திகளைக் காலத்துக்குக் காலம் பின்பற்றி வந்திருக்கின்றது.

ஈழச் சைவர்களினால் புனிதத் திருத்தலம் எனப் போற்றப்படும் - நாயன்மார்களினால் பாடப்பட்ட - இரண்டு புண்ணிய சைவ ஆலயங்களில் ஒன்று திருக்கோணேஸ்வரம். திருகோணமலை நகரோடு அண்டிய குன்றில் - 'குரைகடலோரம் நித்திலம் கொழிக்கும் கோணமலையில்' - அத்திருத்தலம் அமைந்துள்ளது. ஆனால், இன்று அந்த ஆலயத்தின் நிலை என்ன?

நகரின் மத்தியிலிருந்து பார்த்தால் கோணைநாதர் கோயில் தெரியாது. அதற்கு முன்னே மிகப்பெரிய உருவத்தில் புத்த பகவான் தான் தெரிவார். கோணேஸ்வரர் வரலாறை விழுங்கி நிற்கின்றது கோகர்ண விகாரையின் புனையப்பட்ட சரிதம்.

இதுதான் இன்றைய யதார்த்தம்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் அடிப்படைகளாக இருப்பவை மூன்று. ஒன்று - தமிழ்மொழி; மற்றது - தமிழன் என்ற இனம்; மூன்றாவது - தமிழர்களின் தாயகம் என்ற புவியியல் நிலப்பிரதேசம்.

இந்த மூன்று அடிப்படைகளினதும் வலுவான தன்மையை அடித்து நொறுக்கி, அதை மலினப்படுத்துவதன் மூலம் தமிழரின் உரிமைப் போரை - விடுதலை வேட்கையை - நலிவுபடுத்தத் திட்டமிட்டுச் செயற்பட்டது; செயற்படுகின்றது பேரினவாதம்.

அந்த நோக்கத்தின் தொடர்ச்சியே-தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்யும் சதி என்பது துலாம்பரம்.

தமிழர் தாயக எல்லைப் புறங்களில் வசித்த பூர்வீகத் தமிழர்கள் இன யுத்தத்துக்கு முகம்கொடுக்க முடியாது இடம் பெயர்ந்தனர்.

யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்து, சண்டை ஓய்ந்து, அமைதி நிலை நீடித்தாலும் இந்த இடம் பெயர்ந்த அகதிகள் மீளக்குடியேற வகைசெய்யப்படவில்லை. பல இடங்களில் - பல சந்தர்ப்பங்களில் - அதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவுமில்லை.

அதேசமயம், அமைதி நிலையைப் பயன்படுத்தி தமிழரின் அத்தகைய பூர்வீகப் பிரதேசங்களை சிங்கள மயப்படுத்தும் திரைமறைவுப்பணி மட்டும் கனகச்சிதமாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதைத் திருகோணமலை எம்.பி. விசனத்தோடு வெளிப்படுத்திய தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

சிங்கள, பௌத்த பேரினவாதம், தமிழர்களின் பூர்வீகப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளுக்கு பிள்ளையார் சுழிபோடுவது புத்தபகவானின் கோயில் - விகாரை - ஸ்தாபிப்ப தோடுதான் என்பது நமது பட்டறிவு.

அதுதான் ஈழத் தமிழர்களின் தலைநகரான திருகோணமலையின் சுற்றாடலில் நடந்துவருகின்றது என்பதும் தெளிவு.

---

இலங்கைத் தமிழர் துன்பங்களைக் களைவதற்கு

# பாரதமாதா உதவ முன்வராவிட்டால் வேறு யார்தான் வரப்போகிறார்கள்?

### இந்தியப் பிரதமருக்கு த.தே.கூ. கடிதம்

இந்திய தாயகத்துக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையில் தொப்புழ்க் கொடிஉறவு இருந்து வருகின்றது. எம்மை விடுவிக்க பாரதமாதா முன் வராவிட்டால் வேறு யார் வருவார்கள்?

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியொன்றில் கேள்வி எழுப்பியுள்ளது. புதிய இந்திய பிரதமருக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், இலங்கையில் தமிழ் சிறுபான்மையினர் அனுபவித்துவரும் சொல்லொணாத துயரங்கள் தொடர்பாக இந்திய சிந்தனையின் வெளிப்படையான ஒரு மாற்றம் காண்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இனிமேலும், தமிழ் மக்களால் துன்பமுற முடியாது என்ற கட்டத்துக்கு நிலைமை வந்து விட்டது. நாங்கள படும் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரே தீர்வு ஒஸ்லோ பிரகடனத்துக்கமைவாக அர்த்தமுள்ளதோர் சமஷ்டி அமைப்பை வழங்குவதாகவே இருக்கமுடியும். அப்படியான ஓர் அமைப்பில் தான் எமது இனமொழி தனித்துவத்தைப் பேணிக்கொண்டு கௌரவத்தோடும், தன்மானத்தோடும், பாதுகாப்போடும் வாழமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் எமக்கு அளித்து வந்த ஆதரவை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். இலங்கைத தமிழர்களின் துன்பத்தை உலகளவில் வெளிப்படுத்தியதுடன் அது தொடர்பாக இனக்கொலை என்ற பதத்தையும் அவர் பயன்படுத்தினார் என்பதை நாம் நினைவு கூருகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்கள் விடயத்தில் ஆதரவு புதுப்பிக்கப்பட்டிருப்பதற்காக எமது உணர்ச்சிகளை வெறும் எழுத்தினால் மட்டும் தெரிவித்து விடமுடியாது. நாம் இரு தரப்பினருக்குமிடையில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் ஒன்றிற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று கருதுகின்றோம.

தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என்.டிக்சிற் நியமிக்கப்பட்டிருப்பதையும் மகிழ்ச்சியுடன் அவதானித்துள்ளோம். இலங்கை அரசியல் நிலைமை குறித்த அவரது அறிவு எமது பிரச்சினைத தீர்வில் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகின்றோம் அந்தவகையிலான கருத்துக்கள சமீபகாலமாக அவரிடமிருந்து வெளியாகியிருக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பினை இந்தியா வரவேற்பது மட்டுமல்ல, பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்பினரின் சம அந்தஸ்தையும் இன்னதமான காந்திய வழிமுறையில அங்கீகரிக்கும் என்று நம்புகின்றோம்.

இவ்வாறு இந்திய பிரதமருக்கு அனுப்பியுள்ள செய்தியில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ப)

# உலர் உணவு நிவாரணத்தை வெட்டும் முன்நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் பெற்றுவருகின்ற 79 ஆயிரம் குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படுவதற்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை யாழ்மாவட்ட செயலகத் திட்ட அலுவலக பிரதேச செயலாளர்கள், உதவி அரச அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அரச அதிபர் சார்பில் திட்டப் பிரதிப் பணிப்பாளரினால் கையொப்பமிட்டு இச்சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஏற்கனவே மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவைப் பெற்று ஒரு வருடம் பூர்த்திசெய்த குடும்பங்களுககான நிவாரணத்தை நிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நிவாரணம் நிறுத்தப்படவுள்ள 79 ஆயிரம் குடும்பங்களில் சுமார் 30 சதவீதமான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றன. அவர்களுக்கு வேண்டிய ஜீவனோபாய உதவிகளையும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான ஒழுங்கான அபிவிருத்தி சுயவேலைவாய்ப்புத் திட்டங்களையும் இனங்கண்டு செயறபடுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

இதற்குப் பல திட்டங்களை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம், சமுர்த்தி அமைச்சு, அரச நிறுவனங்கள் என்பனவற்றின் நிதி உதவியுடன் கிராமிய மட்டப் புனர்வாழ்வுக் குழுக்கள் கிராமிய நிறுவனஙகள், உள்ளூராட்சி அமைப்புகள் என்பனவற்றின் ஊடாகச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டங்களைச் செயற்படுத்தும்போது விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கைத்தொழில அபிவிருத்தித் திணைக்களம், கடற்றொழில திணைக்களம் போன்றவற்றின் தொழில் நுட்ப ஆலோசனைகள் பெறப்பட்டுச் செயற திட்டங்கள் அதனடிப்படையில் இனங்காணப்பட்டு செயற்படுத்தல் பிரதேச செயலர்களின முக்கிய பொறுப்பாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் கடமையாற்ற வரும் போது நிவாரணம நிறுத்தப்பட்ட குடும்பங்களின் விவரங்களை வழங்கக்கூடிய வகையில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தரவுகளை முதற்கட்டமாகத் திரட்டி வைக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர். (ஒ-68)

# சிற்றுண்டிச்சாலையின்றி செயலக ஊழியர் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்.செயலகத்தில் சிற்றுண்டிச்சாலை இல்லாமையால் அங்கு பணிபுரியும் அலுவலர்களும் தேவைகளுக்காகச் செல்லும பொதுமக்களும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் அங்கு தமது தேவைகளை நிறைவேற்றவரும் பொதுமக்களின நன்மை கருதியும் செயலகத்தின் மேற்குப் பகுதியில் தனியான சிற்றுண்டிச்சாலை ஒன்று இயங்கி வந்தது. ஆனால், அது தற்போது செயற்படுவதில்லை. இச்செயலகத்தில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான அலுவலர்க்ள் தமது மதியஉணவு மற்றும் சிற்றுண்டிகளைப பெறுவதற்கு வெளியில் செல்ல வேண்டியுள்ளது. இதனால், அங்கு பணிபுரியும் பெண் ஊழியர்கள் உட்படப் பலரும் பெரும அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத தெரிவிக்கப்பட்டது.

# பிறப்பு, இறப்புகளைப் பதிய விரைவில் நடமாடும் சேவை

வலி.வடக்கு,ஜூலை9

காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களைப பதிவுசெய்வதற்கான நடமாடும் சேவையொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இதற்கு வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கையினை கொழும்பு பதிவாளர் நாயகம் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதுசம்பந்தமான சுற்றறிக்கை சகல பிரதேச செயலகங்களுக்கும் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காலம் கடந்த பிறப்பு, இறப்புகளை இந்த நடமாடும் சேவையின்போது பதிவு செய்து கொள்ள முடியும் நடமாடும் சேவையின் முன்னோடிச் செயற்பாடாக கிராம அலுவலர்கள் பதியப்படாமல் இருக்கும் பிறப்பு இறப்புகள் சம்பந்தமான விவரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

பிறப்பு இறப்புகளை பதிவு செய்யாது உள்ளவர்கள் தத்தம் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு காலம் கடந்த பிறப்பு இறப்புகளைப் பதிவுசெய்வதற்கான விவரங்களைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

# தேர்தல் செலவுக் கொடுப்பனவு கிராம அலுவலர்களுக்கு இல்லை

வலி.மேற்கு,ஜூலை9

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட கிராம அலுவலர்களுக்கு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் கொடுபனவு வழங்கப்படவில்லை. இதனால் கிராம அலுவலர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் பலதரப்பட்ட கடமைகளையும் மேற்கொண்ட கிராம அலுவலர்களுக்கு இன்றுவரை கொடுப்பனவுகள் வழங்கப் படவில்லை.

கிராம அலுவலர்கள் வாக்களிப்பு நிலையங்களை தமது செலவில் ஒழுங்குபடுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-175)

## நாளை

ஆனி 26
சனிக்கிழமை
(10.07.2004)
திதி : அட்டமி
காலை 6.38 வரை.
நட்சத்திரம்: ரேவதி.
காலை 6.42 அட்டமி நவமி
சுபநேரம்: 2.59 - 4.29
ராகுகாலம்: 8.59 - 10.29
(பழைய நேரப்படி)

# மீசாலை வித்தியாலயத்துக்கான அதிபர் நியமனம் ஒத்திவைப்பு

மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு புதிய அதிபரை நியமிப்பதை இரண்டு மாதங்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஒத்திவைத்துள்ளார்.

இப்பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவர் முன்னர் நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் பதவியேற்றதைத் தடுப்பதற்காக மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தடைப்படுவதைக் கருத்திற்கொண்டு வலய அதிகாரிகள் புதிய அதிபர் பதவியேற்பதை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க் கிழமை தொடக்கம் பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டு இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. 1 சீ தரத்தைச் சேர்ந்த இவ்வித்தியாலயத்தில் ஏற்பட்ட அதிபர் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த ஒருவரை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பணிப்பின் பேரில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜூலை முதலாம் திகதி நியமித்தார். இவர் பதவியேற்பதை எதிர்த்தே போராட்டம் நடத்தப் பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் முன்னர் அவர் கடமையாற்றிய பாடசாலையிலேயே மீண்டும் கடமையேற்குமாறு பணிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## உதயவாக்கு

மனிதன்தான் ஆசைகளைக் கட்டுப் படுத்த வேண்டுமே தவிர, ஆசைகள் மனிதனை ஆட்சிப் படுத்தக் கூடாது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

WPG1 தொடரிலக்கமுடைய Daelim Honda (Japan) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. இருபாலரும் பாவிக்க உகந்தது. தொடர்பு: 'நல்ல சமாரியன்' கோண்டாவில் கிழக்கு, தொ.பே 0777 242511. (33929)

பாலைத் தீராந்திகள்(4"X3") புதியவை சுவருக்கு ஏற்றவை மிக மலிவாகக் கிடைக்கும் தொடர்பு: சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடி, கொழும்புத்துறை. (33930)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 20 வயது, சித்திரை 2ஆம் பாதம், 2இல் செவ்வாய், O/L வரை படித்த சைவபோசன அழகிய மணமகளுக்கு சைவ மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2322, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33884)

## அறைகள் வாடகைக்கு

கல்வியங்காட்டில் இரண்டு அறைகள், குசினியுடன் வாடகைக்கு உண்டு. அறைகள் (தனியாக அல்லது இருவர் தங்க வசதியானது தொடர்பு: த.ரவீந்திரநாதன் (ஆசிரியர்) கலைமணி லேன், கட்டப்பிராய், யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 0777 041313. (33910)

## தேவை

பிரெஞ்சுமொழி (French Language) கற்பிக்கக்கூடியவர் தேவை. மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 0777 110513. இரவு 7 மணி தொடக்கம் 10 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.(33904)

## தவறிவிட்டது

சண்முகம் பிரபாகரன் என்பவரது காப்புறுதி, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன 06.07.2004 அன்று இரவு அளவெட்டிக்கும் சுதுமலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செல்வநாயகம் பரமேஸ்வரி சுதுமலை வடக்கு, மானிப்பாய் (சந்தையடி ஒழுங்கை) என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (33932)

நவாலி வடக்கு, புலவர் வீதியை சேர்ந்த செல்வராஜா ரமேஷ் (ச.நீ) என்பவருடைய அரசாங்க மற்றும் ஊடகவியல் அடையாள அட்டை 4 உள்ளிட்ட பேர்ஸ் ஆனைக்கோட்டைக்கும் நவாலி அரசடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். தெ.பே.இல. 021 - 222 2681, 060 221 2676. (சி-36255)

சின்னத்தம்பி ராசரத்தினம் என்பவருடைய அடையாள அட்டை ஆவரங்காலுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் 28-06-2004 திங்களன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (33895)

## முட்டைக்கோழிகள்

நல்ல இன முட்டை இட ஆரம்பித்து இரு மாதங்கள் நிரம்பிய 50 சிவப்பு நிறக் கோழிகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. கோழிக்கூடுகளும் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு: 0777 116132 (33909)

## விற்பனைக்குண்டு

புறொயிலர். லேயர் ஒருநாள் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர்
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
**யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**
**தொலைபேசி இல.: 060 221 2926**
(சி-36250)(21-11-18)

# கல்லுண்டாயில் இறால் வளர்க்க எழுச்சிப்பேரவை ஆட்சேபம்

கல்லுண்டாய்ப் பிரதேசத்தில் இறால் பண்ணைகள் அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் அண்மையில் மானிப்பாய் பட்டண சபையினர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் 3ஆவது பேராளர் சங்கம் நிகழ்வில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

ஓட்டுமடம் - அராலி வீதியில் அமைந்துள்ள காக்கைதீவு முதல் கல்லுண்டாய் வெளி வரையான 330 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் வளர்ப்பில் ஈடுபடுவதற்காக இறால் வளர்ப்போர் ஊக்குவிப்போர் சங்கம் நடவடிக்கை எடுத்துவரும் வேளையில் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இறால் வளர்ப்புக்கு இப்பிரதேசத்தைப பயன்படுத்தும் பட்சத்தில் நெற்செய்கை பெரும் பாதிப்படைவதுடன், நிலத்தடி நீரும் உவர் நீராக மாறும் அபாயத்திற்கு உள்ளாகும் என்றும் - இதனால் சுற்றாடல் பாதிப்புக்களும் ஏற்படலாம என்றும் - இத்தகைய காரணங்களினால் இப்பகுதியில இறால் வளர்ப்பிற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் எனவும் - சண்டிலிப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.(ஓ-86)

# ஏழை மாணவரின் கல்வியில் அக்கறை கொண்டவர் சி.கே.கே.

## நினைவுநிகழ்வில் கலாசாலை அதிபர் தெரிவிப்பு

ஏழை மாணவர்களின் கல்வியில் முழு அக்கறை கொண்டு விளங்கியவர் கொக்குவில் இந்து முன்னாள் அதிபர் சி.கே.கந்தசாமி.

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அணமையில் நடைபெற்ற முன்னாள் அதிபர் சி.கே.கந்தசாமியின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரை நிகழ்த்திய போதே அவா இவ்வாறு தெரிவித்தார். கலாசாலை அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பக்தி மிகுந்த அசானாக மதிக்கப்பட்டவர் முன்னாள் அதிபா சி.கே.கந்தசாமி அவர்கள். அவர் பணிபுரிந்தகாலம் இந்தக் கல்லூரியின் பொற்காலம் என கூறத்தக்க வகையில் சிறப்புற்று விளங்கியது. குறிப்பாக விளையாட்டுத்துறை என்றாலும் சரி கல்வித்துறை என்றாலும் எமது கல்லூரி கொடிகட்டிப் பறந்த காலமாக சி.கே.கந்தசாமி அவர்களின் காலம் அமைந்திருந்தது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு - மருத்தவ பீடத்திற்கு என கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து மாணவர்கள் முதல் தடவையாகச் சென்றது எங்கள் முன்னாள் அதிபரின் காலத்தில் தான்.

முதல் தடவையாக மலேசியாவில் இருந்து திரட்டப்பட்ட நிதியைப் பயன்படுத்திக் கல்லூரிக்கு மாடிக்கட்டடம் நிறுவப்பட்டதும் இவருடைய காலத்தில்தான்.

அத்துடன், ஆளுமை நிறைந்த மாணவர் சமூகத்தை உருவாக்கிய பெருமையும் சி.கே.கந்தசாமிக்கே உரியது - என்றார்.

அமரர் சி.கே.கந்தசாமி நினைவாக வெளியிடப்பட்ட மலரின் வெளியீட்டுரை நிகழ்த்திய திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம் தமதுரையில்:-

நல்லதொரு ஆசானுக்கு காணிக்கையாக இந்த நூல் வெளியிடப்படுகிறது. மாணவர்களின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு உழைத்துப் பணியாற்றிய பெருமகன் ஒருவர் இன்று கௌரவிக்கப்படுவது பாராட்டுக்குரியது - என்றார்.

முன்னதாக நினைவு நிகழ்வுகள் அன்றைய தினம் முற்பகல் 11 மணியளவில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இளைப்பாறிய பொறியியலாளா தி.நடராசா தலைமையில் ஆரம்பமாகின. அமரரின் உருவப் படத்தினை முன்னாள் அதிபா அ.பஞ்சலிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார். உருவப்படத்திற்கு முன்னாள அதிபர் இ.மகேந்திரன் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மாணவர்களின் தீப அஞ்சலி, கீதாஞ்சலி, மலர் அஞ்சலி என்பன இடம்பெற்றன.

அமரர் சி.கே. கந்தசாமி நினைவு நூலினை எஸ்.குணசிங்கம் வெளியிட்டுவைக்க முதல் பிரதியினை நா.சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். (எ-12-ரி)

# ஓய்வூதிய அதிகரிப்பு இன்னும் வழங்கப்படவில்லை

தென்மராட்சி,ஜூலை9

ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்புத் தொடர்பாக சுற்றறிக்கை வெளியாகி இரண்டு மாதங்களாகியும் இன்னமும் ஓயவூதியர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

1996 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட்டு ஓய்வூதியத் தொகையை மீளாய்வு செயயுமாறு பொது நிர்வாக அமைச்சு அனைத்து ஓய்வூதியம் வழங்கும் நிறுவனங்களுக்கும் அறிவித்திருந்தது. இதற்கான மீளாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், ஜூலை மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவிலும் அதிகரிப்பு வழங்கப்படவில்லை என ஓய்வூதியர்கள தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் உள்ள ஓய்வூதியப் பிரிவுகள் கூட இன்னும் மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்டு ஓய்வூதியக் கொடுப்பனவு கடந்த ஜனவரி முதல் வழங்கப்படல் வேண்டுமென அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

# தமிழரும் முஸ்லிம்களும் ஒற்றுமைப்படாதவரை இரு சமூகங்களினதும் உரிமைகளை மீட்க முடியாது

## அமைச்சர் அதாவுல்லா கருத்து

கொழும்பு,ஜூலை9

வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் பழைய பகையுணர்வுகளை மறந்து, மீண்டும் ஒற்றுமைப் படாதவரை இரு சமூகங்களினதும் உரிமைகளை மீட்டெடுக்க முடியாது.

இவ்வாறு கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா கூறினார்.

தெஹிவளை-ஹல்கிசை முஸ்லிம் மறுமலர்ச்சிக்கழகம் ஏற்பாடு செய்திருந்த தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அமைச்சர் அதாவுல்லா மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணம் மூவின மக்களினதும் தாயகமாகும். மூவின மக்களுக்கிடையில் சகோதர வாஞ்சை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, புரிந்துணர்வு என்பன ஏற்படாதவரைக்கும் எந்தவொரு அபிவிருத்தியும் அங்கு பயன்தரப்போவதில்லை.

முன்பெல்லாம் தமிழர்களின் வைபவங்கள் முஸ்லிம்களின் பங்களிப்புடன் நடைபெற்றன. முஸ்லிம்களின் வைபவங்களில் தமிழர்கள் பங்குகொண்டனர். ஆனால் இன்று ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்கொண்டு நோக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தநிலைமைகள் மாறி மீண்டும் இரு சமூகங்களும் கைகோத்து நிற்கும் காலம் மலருவது எப்போது?

எனது அமைச்சு முழுக்கிழக்கு மாகாண மக்களுக்கும் சேவைசெய்யும். மூவினமக்களையும் அரவணைத்து ஒன்றிணைக்கும் இணைப்புபாலமாக கிழக்கு அபிவிருத்தி அமைச்சு செயற்படக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்துள்ளேன். நாங்கள் ஒற்றுமையுடன் எங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வோம். (க-8)

## க.பொ.த. உயர்தரம் கணக்கீடு, வணிக்கல்வி

கணக்கீடு, புதிய பாடத்திட்ட கருத்தரங்கு 11.07.2004 அன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறும். ஆசிரியர்களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தலைவர்,
வணிக மாணவர் மன்றம்.
(33938)

## பலாலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை அறிவித்தல்

அருள்மிகு அடியார்களே!

அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் வீற்றிக்கும் அருள்மிகு ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் 2002ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நவராத்திரி ஆரம்பநாள் தொடக்கம் நாள்தோறும் பூசைகள், பொங்கல் வழிபாடுகள், பக்திசிரத்தையுடன் பரிபாலன சபையினரால் அடியார் களது ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன. 2004.07.22ஆம் திகதி வியாழக்கிழமை வருடாந்த மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு பத்து தினங்களுக்கு நடைபெறவுள்ளன. திருவிழா உபயகாரர்கள், உருத்துடையவர்கள், அடியார்கள் பரிபாலனசபைத் தலைவருடன் 2004.07.12ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

சீ.சி.கந்தையா
பரிபாலன சபைத் தலைவர்.
(சி36257) (24-11-18-21)

## இடம்மாற்றம் - லிங்கம் வர்த்தக நிலையம்

78, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த லிங்கம் வர்த்தக நிலையம் 07-07-2004 முதல் 246, கே.கே.எஸ். வீதியில் (லக்சுமி பன்சி அருகில்) இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துக் கொள்கின்றது. (33937) (26)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2661700 இலிருந்து 2678526 வரை

சீட்டிழுப்பு இல. 1519 திகதி 07.07.2004

வெற்றி எண்கள்: 02 08 22 28 57

போனஸ் எண்: 47

ஜக்பொட் பரிசு ரூபா. 87,55,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 87,55,600/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 104 | 10,000/- | 10,40,000/- |
| 3 | 5,261 | 500/- | 26,30,500/- |
| 2 | 87,262 | 20/- | 17,45,240/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 106,735 | 10/- | 10,67,350/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்
Rs. 95,81,600/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 65,83,990/-

தொடர் இல. 3625797 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 10 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2663575-7-48
2669901-4-57
2671360-6-12
2667743-9-16
2674348-1-67

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 592 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 06-07-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4783182-4798189 |

லக்கினம் சிங்கம்

வெற்றி இலக்கங்கள்: 19 21 37 38

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது. இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,34,739 | 10/- | 33,47,390/- |
| 2.இலக்கங்கள் | 30,751 | 20/- | 6,15,020/- |
| 1.இல + லக்கினம் | 30,606 | 30/- | 9,18,180/- |
| 2.இல + லக்கினம் | 2,798 | 100/- | 2,79,800/- |
| 3.இலக்கங்கள் | 822 | 500/- | 4,11,000/- |
| 3.இல + லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 3,99,803 | - | 73,81,390/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 73,81,390/-

தொடர் இல. 5760889 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 09ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4796671-8-16
4790051-7-10
4797487-4-22
4784385-9-44
4788155-7-60

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

# காஸாவில் பலஸ்தீனப் போராளிகளுக்கும் இஸ்ரேலியப் படைகளுக்குமிடையே சண்டை

டெல்அவிவ்,ஜூலை9

காஸா பகுதியில் பலஸ்தீன போராளிகளுக்கும் இஸ்ரேலியப் படையினருக்குமிடையில் இடம்பெற்ற மோதல்களில் குறைந்தது ஐந்து போராளிகள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை காஸா நகரின் மீது இஸ்ரேலியர் நடத்திய தாக்குதலிலும் பலர் காயமடைந்துள்ளனர்.

பெயிட் அனான் என்ற நகரின் வடபகுதியில் இரவிரவாக மோதல்கள் இடம்பெற்றன.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் குறைந்தது இருவர் அல்-அக்சா தியாகிகள் படை அணியைச் சேர்ந்தவர்கள் என்றும் இன்னொருவர் ஹமாஸ் உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு இஸ்ரேலின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்திவரும் பலஸ்தீனர்களை அழிபபதற்கென்று கடந்தமாதம் இஸ்ரேலியப் படையினர் பெயிட் அனான் பகுதிக்குள் நுழைந்தனர். காஸாவில் செயற்படும் ஹமாஸ் உறுப்பினர்களைக் கொண்டுசென்ற கார் ஒன்றின் மீது இஸ்ரேலிய பீரங்கிப் படகுகள் கடந்த புதன்கிழமை தாக்குதல்கள் நடத்தியதில் 5 வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட மூன்று பலஸ்தீனர்கள் காயமுற்றனர்.

இவ்வருடம் இஸ்ரேலியர் காஸாப் பகுதியில் நடத்தியுள்ள தாக்குதல்களில் ஷெயிக் அஹமத் யாசின் மற்றும் அப்துல் அசிஸ் அல்-நன்டிஸ்ஸி ஆகிய ஹமாஸ தலைவர்கள் உட்படப் பல முக்கிய போராளித் தலைவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென் காஸாப் பகுதியிலும் இஸ்ரேலியப் படைகள் கடந்த புதன் கிழமை இரவு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தனர். கான்யூனிஸ் அகதிமுகாம்களுக்குள் கவச வாகனங்களையும புல்டோசர்களையும் நகர்த்தினார்கள். இஸ்ரேலியப் படைகள் மீது பலஸ்தீனியர் தாக்குதல் நடத்தும் கட்டடங்களைத் தகர்ப்பதற்குத் திட்டமிடுவதாக இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ப-8)



காஸா மோதலில் காயமடைந்த தந்தையும் மகனும்

# இந்தியாவின் பொருளாதாரம்: ஆபத்து வருகின்றதாம்

மத்திய, மாநில அரசுகளின் கடன சுமை உயர்வதால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என்று சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எவ்.); எச்சரித்துள்ளது.

நிதி மற்றும் வளர்ச்சி என்ற பெயரில் சர்வதேச நிதி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பாகக் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 2003, 2004ஆம் நிதியாண்டில் பலமாக இருந்தது. ஏற்றுமதி, குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் பொருளாதாரம் பலப்பட்டது.

அதேசமயம், மத்திய, மாநில அரசுகளின் கடன்சுமை தொடர்ந்து உயர்ந்துகொண்டிருக்கின்றது. இதனால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும்.

டொலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு சமீபத்தில் உயர்ந்துள்ளது. இருந்தாலும், கடந்த மூன்றாண்டுகளில் ஏற்றுமதியின் மூலம் இந்தியா நல்ல பலனைக் கண்டது. உலக நாடுகளுக்கு இணையாக வட்டி விகிதம் குறைந்துள்ளது. பணவீக்க அளவும் மிதமாக இருக்கின்றது. இருந்தாலும், இன்னும் அது சவால்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கியுள்ளது - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (8)

உலக அரங்கில்

# சதாம் மீதான வழக்குகளை ஐ.நாவே விசாரிக்கவேண்டும்

## சட்டத்தரணிகள் கோருவார்கள்

சதாம் ஹூசைன்மீதான வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படியும் அதற்கான நீதிபதிகளை நியமிக்கும்படியும் ஐ.நா.விடம் வலியுறுத்த சதாமின் சட்டத்தரணிகள் திட்டமிட்டுள்ளனர்.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் மீதான வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆதரவாக வாதாடப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இமானுவேல் லுதாத் என்பவரும் அதில் ஒருவர். பாரிஸில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டி ஒன்றில், சதாம் வழக்கு பற்றி அவர் கூறியதாவது:-

சதாம் மீது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. அவர் மீதான குற்றங்களை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றம், அமெரிக்க ஆதரவாளரான சலீம் சலாபி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. வழக்குகளை விசாரிக்கப்போகும் நீதிபதிகள் யார் என்பதே இன்னும் அறிவிக்கப்படவில்லை. மேலும் நியமிக்கப்படும் நீதிபதிகளும், அமெரிக்காவின் கைப்பாவையாகவே இருப்பர். கடந்த வியாழக்கிழமை சிறப்பு நீதிமன்றத்தில் சதாம் ஆஜர்படுத்தப்பட்டபோது, "ஐ.நா., அனுமதி இல்லாமல் போர் மூலம் எனது அரசு நீக்கப்பட்டது. நான் இன்னும் ஈராக் அதிபராகவே இருக்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார். இதன் மூலம் இந்த நீதிமன்றத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. சதாமைச் சந்தித்துப் பேச அமெரிக்க, ஈராக் அதிகாரிகள் இன்னும் எங்களை அனுமதிக்கவில்லை.

சிறப்பு நீதிமன்றம் நேர்மையாகச் செயற்பட வாய்ப்பில்லை. அதன் பின்னணியில் அமெரிக்கா உள்ளது. எனவே, சதாம் மீதான வழக்குகளின் விசாரணையை ஐ.நா.ஏற்றுக்கொள்ளவேணடும். நீதிமன்றத்தின் நீதிபதிகளை ஐ.நாவே நியமிக்க வேண்டும் என்று ஐ.நாவிடம் வலியுறுத்த முடிவு செய்துள்ளோம். சதாமுக்கு ஆதரவாக வாதாட நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகள் குழுவில் 21 பேர் உள்ளனர். பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்த சட்டத்தரணிகள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். - இவ்வாறு அவர் கூறினார். (8)

# இராணுவம்-தீவிரவாதிகள் நேபாளத்தில் கடும் மோதல்!

## 30 பேர் பலி; பலர் காயம்!

நேபாளத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே இருவேறு இடங்களில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 30 பேர் பலியானார்கள். பலியானவர்களில் 19 பேர் தீவிரவாதிகள். 11 பேர் பாதுகாபபுப் படையினர்.

மேற்கு நேபாளத்தில் சல்யான் மாவட்டத்தில் உள்ள காளிமாதி கல்சி கிராமத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், மாவோயிஸ்ட் தவிரவாதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம துப்பாக்கிச் சண்டை நடந்தது. இந்தச் சம்பவத்தில் பாதுகாப்புப் படைவீரர்கள் 11 பேர் பலியானா; 10 பேர் காயம் அடைந்தனர். இதுதவிர, டெய் லெக் மாவட்டத்தில் நடந்த சண்டையில் ஆறு தீவிரவாதிகளும், ருபந்தகி மாவட்டத்தில நடந்த சண்டையில் இரண்டு தீவிரவாதிகளும் பலியாகினர்; சல்யான் மாவட்டத்தில் தீவிரவர்திகளைத் தேடும் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்தத் தகவல்களை நேபாள நாட்டுப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், ஐரோப்பிய யூனியன் சார்பில் காத்மண்டுவில் உள்ள டென்மார்க் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் நேபாள அரசாங்கத்துக்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையில் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது. இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டுமெனில், சுமுகமான சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கு இரு தரப்புக்கும் இடையில் சண்டை நிறுத்தம் ஏற்படுத்துவது அவசியம். முன் நிபந்தனைகள் ஏதும் இல்லாத பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பிரதமர் ஷெர் பாகதூர் துபாவின் தலைமையில் உள்ள கூட்டணி அரசாங்கம், நாட்டில் உள்ள அனைத்து அரசியல் சக்திகளையும் ஒருங்கிணைத்து, மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் பேச்சுநடத்தி, அவர்களை நேரடி அரசியல் நீரோட்டத்திற்குக் கொண்டு வந்து, பொதுத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்த வழிவகுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. (8)

# செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு முன்னர் சதாமுக்கும் அல்கெய்டாவுக்கும் தொடர்பில்லை

வாஷிங்ரன்,ஜூலை9

அமெரிக்காவில் செப். 11 இல் அல்-கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அந்தச் சமபவத்துக்கு முன் அந்த இயக்கத்துக்கும், ஈராக முன்னாள் அதிபர் சதாம் ஹூசைனுக்கும் நெருங்கிய தொடர்பு இல்லை என்று தாக்குதல் குறித்து விசாரணை நடத்திவரும் அமெரிக்கக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

இதற்கு மாறான கருத்தை அமெரிக்கத் துணை அதிபர் டிக் சென்னி முன்னதாகத் தெரிவித்திருநதார். விசாரணைக்குழு கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில், செப். 11 தாக்குதலுக்கு முன் அல்-கெய்டாவுக்கும், சதாமுக்கும் நெருங்கிய தொடர்பு இல்லை என்று தெரிவித்தது. ஈராக்குடன் போர் நடத்துவதற்காக புஷ் நிர்வாகம் அளித்த பொதுப்படையான தகவல்களே அவை என்றும் விசாரணையின் போது குழு தெரிவித்திருக்கிறது. சதாமுக்கும், அல்-கெய்டா பயங்கரவாத இயக்கத் தலைவர் பின்லேடனுககும் நல்ல தொடர்பு இருந்தது என்று கூறப்பட்டதற்குப் போதிய ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

சமீபத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த டிக் சென்னி, செப். 11 தாக்குதலுக்கு முன்னரே ஈராக்குக்கும், அல்கெய்டா இயக்கத்துக்கும் தொடர்பு இருந்தது என்று கூறியிருந்தார்.

ஈராக்குக்கும் அல்கெய்டா இயக்கத்துக்கும் தொடர்பு ஏதும் கிடையாது என்று வெளியான செய்திகளைச் சென்னி முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. (8)




ஸ்பெயின் நாட்டில் காளை விரட்டும் போட்டியும், காளைகளுடன் சண்டையிட்டு அவற்றை அடக்கும் போட்டியும் மிகவும் பிரபலமானவை. 300 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு காளைகளை விரட்டும் போட்டி கடந்த வாரம தொடங்கியது. இந்தக் காளை விரட்டும் போட்டிக்குத தடைவிதிக்க வேண்டும் என்று விலங்குகள் பாதுகாப்பு அமைப்பை சேர்ந்தவர்கள் பாப்லோனா நகரில் போராட்டம் நடத்திய போது எடுக்கப் பட்ட படம்.

# அரேபியரும் ஆதிவாசிகளும் மேற்கு சூடானில் மோதல்!

## 70 பேர் பலி; 1000 பேர் இடம்பெயர்வு

அரேபியர்களுக்கும் ஆபிரிக்க ஆதிவாசிகளுக்குமிடையே மேற்கு சூடானில் இடம்பெற்ற கடும்சண்டையில் சுமார் 70 பேர் கொல்லப்பட்டனர்; ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்நதுள்ளனர்.

மேற்கு சூடானிலுள்ள டர்பர் பிராந்தியத்தில் ஒரு வாரகாலமாக இச்சண்டை தொடர்ந்து இடம்பெற்று வந்ததாக இத்தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் கலீல் ஹமத் அப்துல்லா புதன்கிழமை குறிப்பிட்டார்.

ஆதிக்குடிகள் சம்பந்தப்பட்ட தகராறு தொடர்பாக ஏற்பட்ட இச்சண்டையில் நான்கு நாள்களுக்குள் சுமார் 35 ஆயிரம் பேர்டர்பர் தெற்குப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ளதாகத தெரிய வருகின்றது.

முன்னைய வதிவிடங்களில் எஞ்சியோரின் எண்ணிக்கை 14 ஆயிரம் மட்டுமே. மற்றவர்கள எங்கு சென்றார்கள் எனும் விவரம் தெரியவில்லை. டர்பர் தீவிரவாதிகளுக்கும் அரேபிய தவிரவாதக் குழுக்களுக்குமிடையில் இச்சண்டை இடம்பெறவில்லை. ஜன்சவீட் ஆதிகுடிகளுககும் அரபுகளுக்குமிடையேதான் மூண்டுள்ளது என்று கலீல் மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் ஆதரவோடு இப்பகுதியில் தாம் இன சுத்திகரிப்புப் பணியை மேற்கொண்டிருப்பதாக இநத ஆதிக்குடிகள் கூறிவருகிறார்கள. இதனால் ஆதிக்குடிகளுக்கும் இப்பகுதி அரபுகளுக்குமிடையே இனப்பிரச்சினைகளும் தகராறுகளும் தலைதூக்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. டானில் பாதுகாப்புப் படைகள் தலையிட்டு, இரு சாராருக்குமிடையிலான சணடையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன. அரேபிய ரிகெட் ஆதிக்குடிகளினதும், ஆபிரிக்க பேர்க்கோ ஆதிக்குடிகளினதும் தலைவர்கள் இரு சாராருக்குமிடையில சமாதானத்தை நிலைநாட்ட முன்வந்துள்ளார்கள். (8)

# அல்-கெய்டாவை ஒழிப்பதில் முஷாரப் உறுதி

பாகிஸ்தானில் அல்-கெய்டா தீவிரவாதிகளின் செயற்பாடுகள் முழுவதும் ஒழிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.

மூன்று நாள் சுற்றுப்பயணமாக பின்லாந்துக்கு வந்திருந்த அவர், பின்லாந்து அதிபர் தர்ஜா ஹாலோனனை புதன்கிழமை சந்தித்தார். அதன்பின், நிருபர்களிடம் முஷாரப் கூறியதாவது:-பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழிக்கும் சக்தி பாகிஸ்தானுக்கு உள்ளது. பாகிஸ்தானில் இயங்கும் அல்-கெய்டா தீவிரவாதிகளின் செயறபாடுகளை முற்றிலும் ஒழிப்போம். பாகிஸ்தானின் நலனுக்காக இதைச் செய்கின்றோம். இதுவரை 600 அல்-கெய்டா தீவிரவாதிகளைக் கைது செய்துள்ள ஒரே நாடு பாகிஸ்தானதான். அல்-கெய்டாவின் முக்கிய தலைவர்களையும் பாகிஸ்தான் கைது செய்துள்ளது என்றார் முஷாரப். இச்சுற்றுப் பயணத்தில் பின்லாந்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உறவு மேம்பாடு, பயங்கரவாதம், ஆப்கானிஸ்தான் பிரச்சினை, இந்தியா - பாகிஸ்தான் உறவு ஆகியவை பற்றி முஷாரப் விவாதிப்பார் என எதிர்பார்கப்படுகின்றது. (8)

**வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு 18 - 45 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது முகாமையாளர் - 101/09
சம்பள அளவுத்திட்டம் 31/99 (அமைவாக) 5000-7300 / 110x10-120x10

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

1. அ. கூட்டுறவுச் சங்கமொன்றில் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்தில் 3 வருட அனுபவம் அல்லது மேற்குறிப்பிட்ட பதவியில் 11ஆவது சம்பளத்திட்டத்தில் 6 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.
*அல்லது*
ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாக இருப்பதுடன் முகாமை மட்டசேவையில் 2 வருட அனுபவம்.
*அல்லது*
இ. கூட்டுறவுப் பணிப்பாளர் தராதரப் பத்திர உயர்பிரிவில் சித்தி அல்லது க.பொ.த. (உ/தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் முகாமைச் சேவையில் 4வருட அனுபவம்.

2. கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது. அவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

3. பிணை, கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணத்திற்கமைவாகவும், நெறியாளர் குழுவின் தீர்மானத்திற்கமைவாகவும் கோரப்படும் பிணை செலுத்தப்படவேண்டும்.

குறிப்பு: பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 23/07/2004ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபுற மேல் மூலையில் பொதுமுகாமையாளர் பதவி விண்ணப்பம எனக் குறிப்பிடவும்.

தலைவர்,
பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
வேலணை.
(33919)(42-12-18-26)


# ஜனாதிபதி பங்குபற்றவிருந்த மகியங்கனைக் கூட்டம் ரத்து

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் கலந்து கொள்ளவிருந்த மகியங்கனைக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டம் தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானது என்று ஐக்கிய தேசிய முன்னணி, செய்திருந்த முறைப்பாட்டையடுத்தே அது ரத்துச் செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

இதுதொடர்பான கடிதம் ஜனாதிபதி செயலகத்தினால் பொதுக்கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாளை நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் நேற்று முன்தினம் இரவு 10 மணியுடன் முடிவடைந்தன.

ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவியாக இருப்பதால், இவர் பங்குபற்றும் மகியங்கனைக் கூட்டம் ஒரு தேர்தல் பிரசார கூட்டமாகவே அமையும் என ஐக்கிய தேசிய முன்னணி குற்றஞ்சாட்டியிருந்தது. அதனால், இவ்விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய தேசிய முன்னணி முறைப்பாடு செய்தது.

அதேவேளை, ஆணையாளர் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் 7ஆம் திகதி (புதன்கிழமை) இரவு பத்து மணிக்குப் பின்னர் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடும் கட்சிகளுக்கும், வேட்பாளருக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார்.

இந்நிலையில் பொதுவைபவம் என்ற போர்வையில் ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றவிருந்த கூட்டம் இப்போது இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

(க-8)

# பிரதான கட்சிகளின் பிரசார ஊர்வலத்தால் பதுளை மாவட்டத்தில் அமளிதுமளி

பதுளை,ஜுலை9

தேர்தல் சட்டதிட்ட விதிமுறைகளை மீறும் வகையில் இருபெரும் அரசியற் கட்சிகளின் தேர்தல் பிரசார ஊர்வலங்கள் நேற்றுமுன்தினம் பதுளை நகரில் இடம் பெற்றன. இந்த ஊர்வலங்களினால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் அச்சுறுத்தல்கள் இடம்பெற்றதனால் பொலீஸார் விரைந்து நடவடிக்கை எடுத்தனர். அப்போது கண்ணீர்ப் புகைப் பிரயோகத்துடன் குண்டாந்தடிப் பிரயோகமும் மேற கொள்ளப்பட்டது.

இப்பிரயோகங்களினால் ஊவா மாகாணசபை வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கலகம் அடக்கும் பொலீஸார் ஒருவருக்கும் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊவா மாகாண சபை வேட்பாளர் மானெல் ரட்நாயக்கா தலைமையில் சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆதரவாளர் கூட்டம் ஒன்று கோஷங்களை எழுப்பிக்கொண்டு வந்த அதேவேளை - ஐககிய தேசியக் கட்சியின் வேட்பாளர் வின்சன் டயஸ் தலைமையிலான பிறிதொரு ஊர்வலமொன்று கோஷங்களை எழுப்பிக் கொண்டு நேரெதிராக வந்தது.

இதையறிந்த பொலீஸார் இவ்விடத்துக்கு விரைந்து ஒலிபெருக்கி மூலம் ஊர்வலங்களைக் கலைந்து செல்லுமாறு அறிவித்தனர். அவ்வறிவித்தல் செவிசாய்க்கப்படவில்லை. இதனையடுத்துக் கலகம் அடக்கும் பொலீஸார் அவ்விடத்துக்கு விரைந்து கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களையும் குண்டாந்தடிப் பிரயோகங்களையும் நடத்தினர்.

சனக்கூட்ட நெரிசலில் பலர் தலைதெறிக்க ஓடியதால் பலர் காயங்களுக்குள்ளாகினர். இதனால், பொலீஸ் அதிகாரி ஒருவரும் காயமுற்றார். இச்சம்பவங்களை அடுத்து நேற்று முனதினம் பதுளை நகரில் பதற்றநிலை காணப்பட்டது.

(க-8)

# மாகாணசபைத் தேர்தல் கடமைகளில் 1,50,000 பேர்!

நாளை நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளில் ஒருலட்சத்து 50 ஆயிரம் பேர் நியமிகக்படுவர் எனப் பிரதித் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ. பீ.சுமணசிறி தெரிவித்தார்.

6 மாகாணங்களில் ஒரே சமயத்தில் நடைபெறும் இந்தத் தேர்தலுக்காக 8 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேல் மாகாணத்தில் 2,400, மத்திய மாகாணத்தில் 1,346, தென மாகாணத்தில் 1,474, வடமத்திய மாகாணத்தில் 651, ஊவா மாகாணத்தில் 795, சப்பிரகமுவ மாகாணத்தில் 997 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தேர்தல் முடிவுகள் 10ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இருந்து வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மறுதேர்தல் நடத்த வேண்டியவகையில் அசம்பாவிதஙகள ஏதும் இடம்பெறாவிட்டால் மறுநாள் காலைக்குள் இறுதி முடிவுகள் அறிவித்து முடிக்கப்பட்டு விடும் எனப் பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

நதியானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டுக் குழுவின் (Paffrel) தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ இந்தத் தேர்தல் பற்றித் தெரிவிக்கையில் கூறியதாவது:-

10 ஆயிரம் நிலையான தேர்தல் கண்காணிப்பாளர்களும், 15 ஆயிரம் நடமாடும் தேர்தல் கண காணிப்பாளர்களும் தேர்தலைக் கண்காணிக்க நியமிக்கப்படவுள்ளனர்.

கடந்த 23,24ஆம் திகதிகளில் இடம்பெற்ற தபால் மூல வாக்கெடுப்பின் போது சுமார் 600 தேர்தல் கண்காணிப்பாளர்கள் பொலீஸ் நிலையங்கள் மற்றும் பஸ் நிலையங்கள் உட்படப் பல இடங்களில் பரவலாக நிறுத்தப்பட்டனர். இம்முறை தேர்தல் வன்முறை நடவடிககைகள குறைவாகவே பதியப்பட்டுள்ளன. ஒரு கொலை முறைப்பாடும் பதியப்பட்டுள்ளது - என்றார் அவர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் போன்றவைகள் உட்பட இன்னும் பல அமைப்புக்கள் கண்காணிப்பு நடவடிக்கை களில் ஈடுபடவுள்ளன.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் அவசியததை எக்கட்சியும் வலியுறுத்தாததால் அவர்கள் அழைக்கப்படவில்லை எனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

(க-8)

## தேசிய கல்வி நிறுவக சான்றிதழ் பெறுவோர் கவனத்துக்கு

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா 1997/1998 ஆம கல்வி ஆண்டுக்கான சான்றிதழ் (மூலப்பிரதி) பெறவேண்டியவர்கள் 500 ரூபாவை இலங்கை வங்கியில் செலுத்திய பற்றுச்சீட்டுடனும் -

2000/2001 ஆம் கல்வி ஆண்டுக்கான விவரச் சான்றிதழ் பெறவேண்டியவர்கள் 250 ரூபாவை இலங்கை வங்கியில் செலுத்திய பற்றுச் சீட்டுடனும் - நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ. இந்துக்கல்லூரி நிலையத்தில் பிராந்திய இணைப்பாளர் திருமதி ச.விஸ்வநாதனைச் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.


**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**
**பாவித்த ஓடுகள் விற்பனை**

எமது ஆலயத்தில் பாவித்த முகட்டு ஓடுகள், தகட்டு ஓடுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் பின்வரும் விவரங்களைப் பூர்ததிசெய்து எதிர்வரும் 15-07-2004 வியாழக்கிழமை பகல் 12மணிக்கு முன்னதாக ஆலய காரியாலயத்தில் நேரடியாகவோ தபால் மூலமோ சமர்ப்பிக்கவும். விண்ணப்பித்தோர் அன்று மாலை 5மணிக்கு ஆலயத்திற்கு சமுகம்தரவும்.

1) பெயர்
02) விலாசம்
03) ஒரு ஓட்டினைக் கொள்வனவு செய்ய விரும்பும் விலை
I முகட்டு ஓடு
II தகட்டு ஓடு
04) தேவைப்படும் ஓடுகளின் எண்ணிக்கை
05) கையொப்பம

முக்கிய குறிப்பு:
ஓடுகளைப் பெற்றவர்கள் முழுப்பணத்தையும் செலுத்தி ஆலயச் சூழலில் இருந்து ஓடுகளை உடனடியாக அப்புறப்படுத்துதல் வேண்டும். (26-12-18)

தலைவர்,
தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.
08-07-2004
(33928)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 30 - 04 - 1942
மறைவு 22 - 06 - 2003

**செல்லையா செல்வரத்தினம்**
(உரிமையாளர், தேவி தொலைத்தொடர்பகம்)

திதி: 09-07-2004

நெஞ்சமெங்கும் தீயள்ளிப் போட்டதென்ன உம்பிரிவால்
கொஞ்சமேனும் இன்பின்றி வாழ்கின்றோம் தஞ்சமென
நின்றெம்மைக் காத்திட்ட எம்தலைவா நீ பிரிந்து
இன்றோடிங் காச்சுதேயோர் ஆண்டு.

இல.40,நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
(33922)(42-12-18-26)



**31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்**



**காங்கேயன் தவறஞ்சினி**
(இராசாத்தி)

அன்பின் வடிவில் 27-08-1965
துன்புத் துயரில் 09-06-2004

கனவுகளோடு வந்தாய்
கண நேரத்தில்
காலனுடன் சென்றாய்
கூற்றுவன் இவனுடன்
ஒப்பந்தம் ஏதும் செய்தாயோ?
உன் நினைவுக்கு வருமுன்
தன் வேலை முடித்துக்
கொண்டான் கனவுபோல்
இருந்தாலும் நனவில்கூட
நம்பமுடியவில்லையே இராசாத்தி!
ஓம் சாந்தி!

ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பூவுலகில் மீண்டும் பிறப்பாய் என்று காத்திருக்கும்:
உடன் பிறவா அன்புத் தம்பி.
(33920) (26-12-18)



**தேவை**

யாழ்.நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலையில் தொழில் புரிவதற்கு பெண் பிள்ளை தேவை. O/L சித்தியடைந்திருப்பதுடன் ஆங்கிலம் ஓரளவு எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.

தொடர்பு: விளம்பர இல: 2323,
மே/பா உதயன்.
(33925)(42)



**மரண அறிவித்தல்**

**கந்தசாமி சிவபாக்கியம்**

நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06-07-2004 செவ்வாய்க்கிழமை நடைபெறுவதாகவிருந்தது. ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தால் குறிப்பிட்ட திகதியில் நடைபெறவில்லை.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (09-07-2004) வெள்ளிக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, செம்மணி இந்துமயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.
(33923) (26-12-18)
தகவல்:
மக்கள், மருமக்கள்.

# தத்துவங்களின் உறைவிடம்; விநாயகரின் வடிவம்



முழுமுதற்கடவுளாகிய பரமேஸ்வரருக்கும் உமையம்மைக்கும் பிறந்த மூத்தபுதல்வரே ஒப்பில்லாத் தெய்வமாகிய விநாயகர் ஆவார். சகல உலகத்தினருக்கும் பிரியமாக நாம் எல்லோரும் வணங்குவதால் விநாயகரைப் பிள்ளையார் என்று எல்லோரும் அழைப்பர்.

இலங்கையில் இந்துக்கள் மட்டுமன்றி, பௌத்தர்களும் விநாயகரை வழிபடுகின்றனர்.

மூன்று கண்களையுடைய சிவபெருமானை நோக்கி ஒரு பொழுது விநாயகர் 'உன் சிரசையே எனக்குப் பலிகொடுத்தால் எந்தக் காரியத்தையும் எதுவித விக்கினமும் இல்லாமல் நலமே தான் முடித்துத் தருவதாகக் கூறினாராம். எனவேதான், நாங்கள் மூன்று கண்களுடைய தேங்காயைப் பதிலாக உடைத்து விநாயகனிடம் ஆசிபெறுகின்றோம்.

ஞானக்கதிர்

சாதாரணமாக எமக்குப் பார்க்கப் பார்க்க அலுக்காத விஷயங்களில யானை உருவமும் ஒன்று. எனவேதான், எத்தனை தடவைகள் பார்த்தாலும் இன்னும் பார்ககவேண்டும் எனத் தோன்றும் ஆனந்தம்பொங்கும் யானை வடிவினனாக விநாயகர் காட்சிகொடுக்கிறார். ஒருமுறை சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாள் நாயனாரும் முறையே யானைமீதும் குதிரைமீதும் கைலாசம் நோக்கிச் சென்றனர். அப்போது ஔவையாரையும் தம்முடன் வருமாறு அழைத்தனராம். விநாயகர் பூசைசெய்து கொண்டிருந்த ஔவையார் கைலாசத்தைவிட விநாயகர் பூசைதான் முக்கியம் எனக்கூறித் தொடர்ந்து பூசைசெய்தாராம். பூசைமுடிவில் விநாயகர் தமது துதிக்கையால் மற்றையோர் கைலாசம் சேருவதற்கு முன்னரே ஔவையாரைத் தூக்கிக் கைலாசம் கொண்டுசேர்த்தாராம்.

ஔவையார் எழுதிய பல நூல்களில் ஒன்று விநாயகர் அகவல் அது முழுவதும் யோக சாஸ்திரமாகும். எப்படித் தியானம்செய்வது, குண்டலினி சக்தியை மூலாதாரத்துக்கு எவ்வாறு எழுப்பிப் பயன்பெறுவது போன்ற பல சூக்குமங்கள் இதில் விவரித்துள்ளார். இவை தற்கால மிகப்பெரிய விஞ்ஞானிகளாலும் சரியான முறைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

விநாயகரைக் கணபதி என்ற பெயரில் பிரதான மூர்த்தியாக வைத்து வணங்குகிற மதம்தான் காணபத்தியம்.

ஒருமுறை மகாவிஷ்ணுவின் சக்கர ஆயுதத்தை எடுத்துப் பிள்ளையார் விழுங்கிவிட்டாராம். அவரிடமிருந்து சக்கர ஆயுதத்தைப் பெறுவதற்காக மகாவிஷணு தனது நான்கு கரங்களாலும் தன் காதுகளைப் பிடித்துக் கொண்டு ஆட பிள்ளையார் மகிழ்ச்சிகொண்டு சிரித்தபோது சக்கரமும் கீழேவிழ மகாவிஷணு எடுத்தாரென்பது புராணக்கதை. இதுவே இப்போது தோப்புக் கரணம் என்று மாறித் தற்போது எமது வழிபாட்டு வழக்கில் உள்ளது.

எந்த மூர்த்தியை வணங்க முன்னமும் விநாயகருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டால் எல்லாக் காரியங்களும் எதுவித விக்கினங்களும் இன்றி சுகமாகும்.

நயினை விஜயன்

# தெய்வீக ஸ்தலங்களில்...



திருவாவடுதுறை ஆதீனத்தில் இலங்கையைச் சேர்ந்த ஓதுவார் கலாபூஷணம் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தனுக்கு ஆதீன குரு மஹா சந்நிதானம் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம்.



கலைநகர் கம்பம்புலோ ஆதி வைரவப்பெருமான் ஆலயத்தை வடிவமைத்த சிற்பக் கலைஞர் சீ.செந்தூர்ராசாவுக்கு "சிற்ப வித்தகன்" என்னும் பட்டம்வழங்கும் வைபவத்தை சங்கானைப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் மு.சிவராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் ஆலயப் பரிபாலனசபையின் செயலாளர் வி.ரி.கதிர்காமநாதன் அருகில் நிற்பதையும் முதலாவது படத்திலும் (வலமிருந்து இடமாக) -

சிற்பக் கலைஞர் சீ.செந்தூர்ராசாவுக்கு 'சிற்ப வித்தகன்' என்னும் பட்டத்தை யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் வழங்குவதையும் மேடையில் ஆலய பூசகர் பா.பாலகுமாரன் சர்மா, ஆலயப் பரிபாலன சபையின் தலைவர் செ.பரமேஸ்வரநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படம்: வலி.மேற்குச் செய்தியாளர்)

# மனோபலத்துடன் ஆத்மபலத்தையும் தேடுங்கள்; வாழ்க்கையில் முன்னேற பெரும் வழி அதுவே!

**கடந்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சென்னை மயிலாபபூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்" ஆன்மீக சஞ்சிகையின் ஆசிரியருமான தவத்திரு சுவாமி விமுக்தானந்தர் மகராஜ் அன்னை சாரதாதேவியின் 150ஆவது பிறந்த நாளையொட்டிப் பாடசாலைகள் மட்டததில் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளின் தொகுப்பு இது.**

'நரேந்திரநாத்' என ஆரம்பத்தில் பெற்றோரால் நாமகரணம் செய்யப்பட்டவரும், தன் இளவயதில் ஆத்மீக துறையில் ஈடுபாடுகொண்டு, தனது குருநாதரான பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரால் வழிநடத்தப்பட்டவருமான சுவாமி விவேகானந்தர் தனது ஆத்மீகக் கருத்துக்களால் மனித குலத்துக்கே நல்வழி காட்டிய உத்தம மகானாவார். தமது அன்பு, அறிவு மற்றும் ஆத்மீக பலத்தால் வீரமும் வேகமும் கொண்ட ஆளுமைமிக்க மனிதராகத் திகழ்ந்ததன்மூலம் பேரும் புகழும் ஈட்டிய வீரபுருஷராக வாழ்ந்த மகான் சுவாமி விவேகானந்தராவார்.

கிறிஸ்தவ, இஸ்லாம் மற்றும் பௌத்தம் என்ற மதஅடிப்படையிலோ அல்லது எந்தவொரு இன அடிப்படையிலோ மனிதர்களிடம் எவ்வித வேறுபாடும் அவர் ஒருபோதும் காட்டியதில்லை. இவையெல்லாவற்றுக்கும் மேற்சென்று உலகத்து மக்கள் யாவரையும் மனிதர்கள் என்ற ரீதியிலேயே அவர் நோக்கினார். மனிதன் வாழ்க்கையில் ஆத்ம ஈடேற்றத்தை அடையும் வகையில், உலகில் மனித தர்மங்களைப் பின்பற்றி வாழ முயலவேண்டுமென சுவாமி விவேகானந்தர் உபதேசித்துள்ளார்.

இன்றைய மாணவர்களே நாளைய உலகைக்கட்டி எழுப்பவல்ல சிற்பிகள். ஆகையால், மாணவர்கள் தமது மாணவப் பருவத்தில் கீழ்ப்படிவுடன் வாழத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளல்வேண்டும். அது பின்னர் அவர்களை உன்னத சாதனைகள் புரியக்கூடிய உயர்ந்த மனிதர்களாக மற்றையோருக்குக் கட்டளையிடும் நிலைக்கு அவர்களை உயர்த்தும்.

சுவாமி விவேகானந்தர் பலாத்கார மதமாற்றத்தை என்றுமே ஆதரித்ததில்லை. பலாத்கார வழியில் ஒன்றைச் செய்யமுயலும்வேளையில் நோக்கம் குன்றுமேயொழிய நிறைவேறுவதில்லை. மனதில் உயர்ந்த எண்ணஙகளையும், இலட்சியங்களையும் வளர்த்துக்கொள்ள இளைய சமூகம் ஆர்வம்காட்டவேண்டும்.

நம் அனைவரிடமும் மாபெரும் சக்தி உண்டு. ஆனால், நம்மில் பெரும்பாலோர் அதனை உரிய வகையில் பயன்படுத்தத் தவறிவிடுகின்றோம். உயர்ந்த இலட்சியங்களுடனும், ஊக்கத்துடனும் செயற்பட்டால் நிச்சயமாக மாணவ சமுதாயம் தமது எதிர்கால வாழ்க்கையில் புகழையும் நிறைவையும் பெறமுடியும். அதன்மூலம ஆத்மதிருப்தியும் மகிழ்வும் கிட்டும். அதன பலனாய் மனதில் தோன்றும் சகல சஞ்சலங்களும் எம்மைவிட்டு அகலும்.

சுவாமி விவேகானந்தர் மனிதன் சோம்பேறித்தனமாக வீண்பொழுது போக்குவதை வெறுத்தார். இன்றைய சமுதாயச் சூழலில் மலிந்து போய்க் காணப்படும்பொழுதுபோக்குச் சாதனங்களால் மாணவர்களின் சிந்தனைகள் திசை திருப்பப்படுகின்றன. அறிவு மனிதனிடம் இயற்கையாகவே அமைந்திருப்பதொன்று. அதனைத் தமது சுறுசுறுப்பு மற்றும் விடாமுயற்சி என்பவற்றால் மட்டுமல்லாது ஆராய்ச்சியின் மூலமும் கற்றுதெளிந்து வளர்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வோர் மாணவனதும் கடமையாகும்.

### சமூகத்தின் கடமை

ஒழுக்கத்தை அளிக்கும், மனவலிமையைத் தரும் புத்தியை விசாலிக்கச் செய்யும் மற்றும் உடல் வலிமையுடன் தன்னம்பிக்கை கொணடு செயற்படும் உயரிய குணங்களை அளிக்கும் கல்வியைப் பெற்றுக்கொள்ளத்தக்க வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது உயர்ந்த சமூகமொன்றின் கடமையாகும்.

இவற்றை அடையும்வகையில் சுவாமி விவேகானந்தர் நமக்கென நான்கு அறிவுரைகளைச் சொல்லிவைத்துள்ளார்.

எதைப் பற்றியும் கவலைப்படாதே; ஜடமாகிக்கிட, எப்போதும் சுறுசுறுப்பாக இரு, எப்போதும் சிந்தித்த வண்ணம், உலக இயக்கம் குறித்து ஆராய்ச்சி செய்தவண்ணம் இரு மற்றும் எந்தவேளையிலும் பிரார்த்தனை செயத வண்ணம் இரு என்பவைகளே அந்த அறிவுரைகளாகும். "The Youth are not Useless. We usethemLess" என அறிஞரொருவர் கூறியுள்ளார்.

உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் மனிதன் வலிமை கொண்டிருத்தல் வேண்டும். அதுவே மனிதனின் முக்கிய தேவையாகும். உடற்பலம், மனபலம், புத்திபலம் மற்றும் ஆத்மபலம் என்பவை மனிதனை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும்.

சுவாமி விவேகானந்தர் தனது போதனைகளில் வற்புறுத்திய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகியதன் மூலம் வாழ்க்கையில் உயர்வும் புகழும்பெற்ற பலர் நம்மிடையே வாழ்ந்துள்ளனர்; இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் இந்தோனேசிய நாட்டின் ஜனாதிபதியாகவிருந்த சுகார்ட்டோ, இந்திய



நாட்டின தற்போதைய ஜனாதிபதி அப்துல்கலாம் மற்றும் புகழ்பெற்ற இந்திய நாட்டுக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் ஆகியோர் சுவாமி விவேகானந்தரின் போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்தது மட்டுமன்றி, அவரது போதனைகள் தமது வாழ்க்கைக்கும், உயர்ச்சிக்கும், வெற்றிக்கும் எந்த அளவுக்கு உதவியுள்ளன என்ற தமது அனுபவங்களை நாமும் தெரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

**தொகுப்பு: பொன்வேலன்**

இந்தவகையில் இனமத வேறுபாடுகள் எவறையும் பாராட்டாது மக்கள் மத்தியில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர், தூய அன்னை சாரதா தேவி மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் ஆத்மீகக் கருத்துக்களை இளைய தலைமுறையினரின் உள்ளத்தில் பதியவைக்கும் நோக்குடன் வெளியிடப்படும் 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற மாதாந்தச் சஞ்சிகையை இன்று இந்தியாவில் மட்டும் 35ஆயிரம் மாணவர்கள் விலைகொடுத்து வாங்கிப் படித்துப் பயனடைவது சுவாமிகளின் ஆத்மீகக் கருத்துக்களுக்கு இன்று மக்கள் மத்தியில் காணப்படும் ஈடுபாட்டுக்கு ஒரு சான்றாகும்.

இந்திய அரசு ஜனவரி 12 ஆம் திகதியைத் தேசிய இளைஞர் தினமாகப் பிரகடனஞ்செய்து வருடாவருடம் அதனைக் கொண்டாடி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக அவ்வாண்டில் தீரமுடன் செயற்பட்டு சமூகத்துக்குப் பணிபுரிந்த இளைய தலைமுறையினரை இனங்கண்டு பரிசளித்து உற்சாகப்படுத்தும் பணியை ராமகிருஷ்ண விஜயம் சஞ்சிகையை வெளியிடும் சென்னை ராமகிருஷ்ணமடம் ஆற்றிவருகின்றது. அந்தவகையில் இவ்வாண்டு தீரமுடன் செயற்பட்டவராக இச்சஞ்சிகையால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட நாகபார்வதி என்ற சிறுமியைப் பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்வது பயனுள்ளதொன்றாகும்.

குடிசைகள் நிறைந்த குடியிருப்பொன்றில் தற்செயலாகப் பற்றிக்கொண்ட தீ, ஏனைய குடிசைகளுக்கும் பரவிப் பற்றிக்கொண்டதைக் கண்டும் அத்தீயை அணைப்பதற்குத் தயங்கி நின்ற குடிசைவாசிகளைச் சிறுமி நாகநந்தினி கண்டாள். சுற்றிநின்று உதவிகோரிக் கூக்குரலிட்டதைத் தவிர அக்குடிசைவாசிகளில் எவரும் தீயை அணைப்பதற்கான எவ்விதமுயற்சிகளிலும் ஈடுபடாதிருப்பதை அச்சிறுமி கண்டாள். கொழுந்துவிட்டெரியும் குடிசையொன்றினுள் சிக்கிக்கொண்ட குழந்தையொன்றினை அததீயினின்றும் மீட்டெடுக்க எவரும் முன்வராததையும் அச்சிறுமி அவதானித்தாள். துணிவுமிக்க அச்சிறுமி தன் உயிராபத்தையும் பொருட்படுத்தாது அக்குடிசைக்குள் பாய்ந்துசென்று அக்குழந்தையை மீட்டெடுத்து அதனது உயிரைக் காத்தாள். அவளது அத்தீரச்செயலைப் பாராட்டியவர்களிடம் அச்சிறுமி அடக்கத்துடன் "எல்லோரும் என்னைப் பாராட்டுகிறீர்கள்! ஆனால் எனக்குத்தெரியும் இச்செயலுக்கான சக்தி சுவாமி விவேகானந்தரிடமிருந்தே எனக்குக் கிடைத்தது" எனக்கூறிய வாக்கியங்கள் எம்மைச் சிந்திக்கவைப்பனவாக அமைகின்றன.

இது சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களின் தாக்கத்தால் அச்சிறுமிக்கு ஏற்பட்ட துணிவின் பலனாகும். சுவாமி விவேகானந்தர் கூறும் கருத்துக்களை ஒரு சில சொற்களில் அடக்கிவிடலாம். ஆனால், அவை வியாபித்துப் பரவிப் பலரது மனங்களில் பதிவாகிவிடுகின்றன.

"வலிமை: வலிமை; இதுவே எமது தேவை" சுவாமி விவேகானந்தரின் மேற்சொன்ன வாக்கியம் விரிந்துபரந்த பல கருத்துக்களைத் தன்னுள் அடக்கிநிற்கின்றது. உடல்வலிமை மட்டுமன்றி மனஉறுதி மற்றும் ஆத்மபலம் என்பவை மனிதனுக்கு அத்தியாவசியம் என்பது சுவாமிகளின் கருத்து வெளிப்பாடுகளாகும். அதற்கமைய அவரும் திடமான தேகக்கட்டும், தீர்க்கமான ஒளிவீசும் கண்களும், தெளிந்த சிந்தனையும் கொண்ட மகானாக மக்கள் முன் வாழ்ந்து காட்டினார். இரும்பையொத்த தசைகளும் எஃகையொத்த நரம்புகளும் கொண்ட துடிப்புள்ள, ஆரோககியமான உடல்வலுவை இளைஞர்கள் கொணடிருக்கவேண்டுமெனச் சுவாமி விவேகானந்தர் விரும்பினார். மனபலமும், ஆத்மபலமும் இளைஞர்கள் தமது வாழ்க்கையில் உயர உதவும் கருவிகள் எனச் சுவாமி விவேகானந்தர் உறுதியாக நம்பினார்.

மனிதனால் நிறைவேற்ற முடியாதது ஒன்றுமில்லை என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் "Everything is possible" என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் எனச் சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு உபதேசித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் ஆத்மீகக் கருத்துக்களை இளம் சிறார்கள் மனதில் ஆழப் பதியவைத்து அவர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாயின், உண்மைச்சம்பவங்கள் மற்றும் கற்பனைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## [illegible] பிறந்தநாள் வாழ்த்து



விடத்தற்பளையைச் சேர்ந்த தங்கவடிவேலு - றோகினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**வதனன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று
(09.07.2004) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில்
தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, அக்கா
தாட்சாயினி, விடத்தற்பளையில் இருக்கும்
அப்பப்பா, நாகராசா மாமா, அத்தை,
ஜாளினி, நிலாந்தினி மற்றும் [illegible]
பெரியப்பா குடும்பம், சிவராசா குடும்பம், [illegible] குடும்பம்,
லண்டன் குட்டி அண்ணா, சுவிஸ் மாமா - அத்தை,
ஆரணி மச்சி, விடத்தற்பளை [illegible],
அப்பம்மா குடும்பம், [illegible] அம்மம்மா,
சிற்றம்பலம் மாமா குடும்பம் ஆகிய எல்லோரும்
[illegible] பிள்ளையார் அருள்வேண்டி
சகல செல்வங்களும் பெற்று
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

09.07.2004

விடத்தற்பளை. **க.நாகராசா.**

(33882)(4-0)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சின்னப்பொடி கதிரவேலு**



| பாரில் | விண்ணில் |
|---|---|
| 12.05.1928 | 22.06.2003 |

அன்பின் திருவுருவே பண்பின் பிறப்பிடமே
ஆண்டு ஒன்று சென்றிடினும்
அப்பாவே நீர் எமக்கு அணையாத தீபமாய்
ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறீர்!

முகவரி:
கோவிலாக்கண்டி, கைதடி.

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(33888)(34-19-18-24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கருவிலைச் சேர்ந்த
திருமதி **புவனேஸ்வரி குமாரசுவாமி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06-07-1946 | 09-06-2004 |

ஏழ்பிறப் பும்உளம் மறவா
திருக்கத் தாய் அன்பெனும்
பால்வார்த்து வளர்த் தெடுத்து
பரிந் தணைத்த எம்மன்னையே!
வாழ்வனைத்தும் உன் நினைவால்
வழுத்தித் துதித் தேத்துகிறோம்
சூழ்கின்ற திருவருட் கீழ்
சுகம்பெறுக எனத் துதித்தே!

கடந்த 09.06.2004 அன்று எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்த செய்தியறிந்து ஓடோடிவந்து எங்கள் துயரைப் பகிர்ந்து எமக்கு உறு துணையாய் இருந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கியோர், கவி கூறி இரங்கல் இதழ் அச்சேற்றியோர், தொலைத்தந்தி மூலம் துயரில் பங்குகொண்டோர், மலர் அஞ்சலி செலுத்தியோர், இறுதிக்கிரியைகளிலும் இறுதியாத்திரையிலும் பங்குகொண்டு சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், இன்று (09.07.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

28/9, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**அன்புக் கணவர், பிள்ளைகள்.**

(33802) (24-19-18)

## பரதநாட்டிய அரங்கேற்றம்



யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வைப் பிறப்
பிடமாகவும் நியூசிலாந்து ஒக்லாந்தை
வசிப்பிடமாகவும் கொண்ட

திரு. திருமதி மோகன்ராஜ்-ஜோதினி
தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
செல்வி
**அமுதினி மோகன்ராஜ்**



அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
11.07.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30
மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம்
வருகை தந்து அரங்கேற்றம் காணும்
செல்வியை ஆசீர்வதித்து வாழ்த்தி விழாவைச்
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

16,Fedrick Reece Drive
Manurewa, Auck land
New Zealand

திரு. திருமதி மோகன்ராஜ்


## ஐரோப்பாவில் உயர்கல்வி

பாடசாலையைவிட்டு விலகியோருக்கும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கும் பள்ளிப்படிப்பு முடித்தவர்களுக்கும் ஐரோப்பாவில் உயர்கல்வி பெற வசதி.

தெரிவு வாய்ப்புள்ள கல்வித் துறைகள்
★ மருத்துவம் ★பொறியியல்
★ வியாபாரக் கற்கை நெறிகள் (Business)

விசா உத்தரவாதமுள்ளது
2004 செப்ரெம்பர் அனுமதிக்கு எவரும் விண்ணப்பிக்கலாம்.

செப்ரெம்பர் Semister இல் அனுமதி

மேலதிக தகவல்களுக்கு:
**T.P.: 021 - 222 - 7133.**

(33874) (26-19-18-24)



## G.A.Q., 1st in Com.

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகம்
(வெளிவாரி)
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
10.07.2004
விவரங்களுக்கு: S.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(33859) (24-19-18)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 – 06 – 1936 | 22 – 06 – 2003 |

**அமரர் நவரத்தினம் தவநீதராஜா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: 09-07-2004

வையத்துள் வந்துதித்த உத்தமருள் ஒருவர்
வித்தகப் புலமை விளையாட்டு அத்தனைக்கும் அதிபரிவர்
அன்பும் கருணையுமே தம் வாழ்வென்று இயம்பியவர்
விண்சென்று அகவை ஒன்றெனினும்
என்றென்றும் எமதிதயத்துள் வாழ்ந்திடுவீர்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"குருக்கட்டு",
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் நினைவுகளுடன்:
**அன்பு மனைவி, மகன், சகோதரன் மற்றும் உறவினர்.**

(33819)(42-19-18-24)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**வல்லிபுரம் சின்னத்தங்கச்சி**

நாள்கள் கடந்து மாதங்கள் கடந்து
வருடங்கள் இரண்டாகி விட்டதே!
"எமது அருமை அன்னையே" பாசத்தின்
வடிவாகப் பாரினில் எம்மையெல்லாம் பண்பு
சொல்லி பரிவுகாட்டி, படிக்கவைத்து
நேசத்தில் மணவிழாக்கள் நிகழ்த்தி வைத்து
மகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் புடைசூழ நேசத்தின்
இல்லத்தரசியாக வாழ்ந்த எம் அன்னை
**திருமதி வல்லிபுரம் சின்னத்தங்கச்சியே!**
இறக்கும் பொழுதும் இறுமாப்புக் குறையாமல்
இடையில் கொஞ்சம் கலங்கினாய்
வாழ்வு நிரந்தரமல்ல, வாழ்வின் நிலவும்
நிரந்தரமல்ல, ஊரும், உறவும், நிரந்தரமல்ல
உறவின் அன்பு ஒன்றே நிரந்தரம்
இறுதியில் தளர்ந்து இடையில் மகிழ்ச்சியை
இழந்தாய். இவ்வுலக வாழ்வு போதுமென்றே
விண்ணுலகம் சென்றாய்
வெண்ணிற மலர்கள் தூவி உங்கள் ஆன்மா
சாந்தியடைய வேண்டுமென்று இறைவனைப்
பிரார்த்தித்து வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆனந்தா வீதி,
மானிப்பாய்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(33891) (24-19-18)

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 – 05 – 1950 | 09 – 07 – 1995 |

திருமதி
**கமலநாதன் சாவித்திரி** (பேபி)

அம்மா! ஆண்டுகள் பல சென்றாலும்
உங்களின் நினைவு எமது நெஞ்சத்தில்
என்றென்றும் நிலைத்திருக்கும்.
உங்களின், உங்களுடன் இணைந்த
கனி, ராக மற்றும் அனைவரினதும்
ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், அன்புக் கணவர்.**

(33651)(39-19-18-24)

# "... இன்றைய பெண்களைப் பற்றி பெருமைப்பட ஏராளம் உண்டு..."

**கேள்வி: தற்காலப் பெண்களைப் பற்றி உங்களின் மனப்பதிவு எப்படி?**

பதில்: இக்காலப் பெண்களின் சாதனைகளைக் கூற வார்த்தைகள் இல்லை. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் பெண்களின் பங்களிப்பு அதில் பிரகாசித்தபடி இருக்கிறது. அடங்கியும் ஒடுங்கியும் வாழ்ந்தவள் இன்று சாதனைகள் படைக்கின்றாள் என்றால் அவளுக்கு நிகர் யார்? விளையாட்டுத்துறை, கல்வித்துறை எதிலுமே எதிர் நீச்சல் போடுகின்றாள். சவால்களைச் சாதனையாக்குகின்றாள். அகப்பை பிடித்த கைகள் ஆயுதம் தாங்கியும் அரசவையிலும் போராடுகின்றன. இதில் பெருமைப்படுவதற்கு ஏராளம் உள்ளன. நானும் பெண்ணாய பிறந்தமைக்காய் பெருமைப்படுகின்றேன்.

**இன்றைய இளம் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று மூத்தோரிடம் கேட்டால் பொதுவாகக் குற்றச்சாட்டுக்களே வந்துவிடும். இதற்கு மாறாக இப்படியும் கருத்துக்கூறுபவர்கள் இருக்கிறார்கள் என்பது சற்று ஆறுதலானது. இன்றைய இளம் பெண்களைப் பற்றி வயதில் மூத்த பெண்களின் கருத்துக்களைக் கேட்டோம். பிரபலமான பெண்களை விடுத்து சாதாரணமானவர்களை அணுகிக் கருத்துக் கேட்டோம். கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினம் இரத்தினேஸ்வரி (வயது65) எங்களை வரவேற்று தன் கருத்துக்களை முன்வைத்தார். அவருடனான செவ்வி இன்றைய 'திலகம்' பகுதியை அலங்கரிக்கின்றது.**

**கேள்வி: பெண்களின் சுயாதீனச் செயற்பாடுகளுக்கு ஆண்களின் துணை அவசியமா?**

பதில்: பெண்கள் தம்மை வளர்த்துக்கொள்ளக் கட்டாயம் ஆண்துணை வேண்டும். கொழு கொமபில்லாத கொடி சிறப்பாக வளராது. துணையில்லாத வாழ்க்கையில் குறுக்கீடுகள் பல களங்கங்களை ஏற்படுத்திவிடும். ஆண்துணை இல்லாது வாழ முடியாது என்பது என் கருத்தல்ல. ஆண் என்ற பாதுகாப்பு ஒவ்வொரு பெண்ணுக்கும் தேவை. சமூகக்கட்டுப்பாட்டுடன் அமைந்த வாழ்க்கைதான் இன்று வரை நிலை பெற்றிருக்கிறது. தனித்து, தான்தோன்றித்தனமான வாழ்க்கை வாழ்பவர்களை அதிலும் பெண் என்றால் ஏன் நாங்களே கதைக்கிறோம். தனியா எதைச் செய்கிறா என்று. அதுவே ஒரு ஆண்துணையோட செய்யும்போது அதற்கு ஒரு மதிப்பு. கல்யாணம் செய்ததும் குடும்பமாக நன்மை தீமைகளுக்குச் செல்ல வேண்டும். கல்யாணம் செய்தவள் தான் நல்ல காரியங்களை முன்னின்று நடத்த வேண்டும் என முன்னைய காலத்தில் விதித்த நடைமுறைகளைப் பின்பற்றியதால் தான் குடும்பம் கோயிலாக இருந்தது. விவாகரத்துக்கள் பேசக்கூடாத கதையாக இருந்தன. இன்று நாளுக்கு நாள் விவாகரத்தும் அடிதடி சண்டையும் குடும்பங்கள் பிரிந்து பிள்ளைகள் தவிப்பதும் ஏன்? சரியான முறையில் வாழ்வை அமைத்து நல்லமுறையில் நடத்தினால் இப்படி எல்லாம் வருமா?

பெண் திருமணத்தின் முன தந்தையையோ, ஆண் சகோதரத்தையோ சார்ந்து வாழ்கின்றாள். திருமணம் முடித்த பின் கணவனைச்சார்ந்து வாழ்கின்றாள். பொதுவாக அண்ணா, அப்பா, கணவன் அனைவரும் ஆண்கள் தானே.

சில இடங்களில் ஆண்கள் படிக்கல்லாக இருப்பதற்குப் பதில் தடைக்கல்லாகவும் இருக் கிறார்கள் தான். எதையும் சாதிக்கும் பெண் இதனையும் தனக்குச் சாதகமாகப் படைக்க முடியாதா? பெண் முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை.

**கேள்வி: பெண்கள் பெண் விடுதலை பேசுவதைப் பற்றி......?**

பதில்: நீர் எந்தக் காலத்தில் இருக்கிறீர்?.... (சிரிக்கிறார்) இப்ப எந்தப் பெண்ணும் தனக்கு எதிராகப் பிரச்சினைகள் தோன்றும் போது அதனைச் சரியான வழியில் கையாண்டு விடிவைப் பெற்றுக்கொள்கின்றாள். விதிவிலக்காகச் சிலர் இருக்கின்றார்கள் தான். பெண் விடுதலை என்றால் ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. அவர்களின் முரண்பாட்டுக் கருத்துக்கான போராட்டம் தான். இதில் விடுதலை என்று குடும்பத்தை விட்டு, உறவுகளை விட்டுப் போய்விடுவதா? தனது உரிமைகளை தனது கடமைகளின் மூலம் பெற்றுக்கொள்வதுதான் சரி என்று நினைககிறாள். ஒரு பெண் முழுமையடையும்போது முழுச்சமூகமுமே விடுதலை பெறுகின்றது. இது நான் சொல்லவில்லை முன்னோர் சொன்னது.

**கேள்வி: பெண்களை மட்டும் பண்பாட்டுச் சின்னமாகப் பார்க்கும் நிலை சரியா? இந்நிலை பெண் முன்னேற்றத்திற்குத் தடையா?**

பதில்: பெண் காலத்திற்கேற்றவாறு மாற வேண்டும். ஆனால் தமிழ்ப்பண்பாட்டுக் கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையில் மாறக் கூடாது. தற்போது எங்கட பிள்ளையள் எல்லாம் 'றெடிமேற்' கலாசாரத்துக்குள்ள, மூழ்கிக் கொண்டிருக்கினம். இதனால் தான் சமூகச் சீரழிவுகள் ஏற்படக்காரணமாக அமைகின்றது. பெண் தனக்குரிய இயல்பை எந்நிலையிலும் இழக்கக் கூடாது. தமிழ்ப்பொம்பிளை என்றால் சேலை கட்டி, பொட்டுவைத்து தமிழ் மணம் கமழும். இப்ப நுனி நாக்கு இங்கிலீசுல, ஜீன்ஸ் போட்டு, எங்கடை கலாசாரத்தை விற்கினம். பெண்பெண்ணாய்த் தான் இருக்க வேண்டும். உடுப்பு மாற்றி, நடை, உடை பாவனையை மாற்றுவதால் தான் முன்னேற்றம் ஏற்படும் என்பதல்ல. எந்தச் சந்தர்ப்பத்திலையும் தங்களை தாங்களே விற்கக் கூடாது. இன்றைய அவசர உலகில் வாழ்ந்தாலும் எம் பண்பாட்டு அம்சத்தை இழக்கலாமா?

**கேள்வி: பெற்றோர்கள் பெண்பிள்ளை வளர்ப் புப்பற்றி வைத்திருக்கும் அபிப்பிராயம் பற்றி என்ன கூறுவீர்கள்.....?**

பதில்: இப்பவும் பெண்பிள்ளை என்றால் சுமையாய் நோக்கிற காலம் தான். எப்படித் தான் பெண் முன்னேற்றம் பற்றி வீடுகளில் பேசினாலும் சீதனம் வேண்ட வேணும் என்று நிற்பது பெரும்பாலும் பெண்கள் தான். வெளிநாட்டு மோகம் வேற, இதுக்கு தூபம் போடுது என்று சொல்லவேண்டும்.

பொம்பிளைப்பிள்ளைகளை எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற வேண்டும். வீட்டுக்குள்ள பூட்டி வைத்திருக்கக் கூடாது என்று பெற்றோர் நினைக்குமளவுக்கு, பெண்பிள்ளைவளர்ப்பு

## செவ்வி: தயாமதி

மேலோங்கி நிற்கிறது என்று தான் சொல்ல வேண்டும். சினிமாக்களைப் பார்த்து என்ர பிள்ளை இப்படி உடுப்புப்போட வேணும், தலைமயிர் வெட்ட வேணும் எனப் பெற்றோரே ஊககம் கொடுக்கினம். பிள்ளை தன்னம்பிக்கையுடன் வளர்கின்றாள் என்றால், மறுபக்கம் பெண்கள் எதற்கும் துணிவார்கள் என்ற தப்பபிப்பிராயத்தை எதிர்ப்பக்கத்தாரிடையே வளர்க்கிறது. இப்ப ஒரு பொம்பிளைப்பிள்ளை தனியா றோட்டால போக முடியுமா? இத்தகைய சீரழிவுக்குப் பெற்றோர் தான் காரணமாக அமைகிறார்கள்.

**கேள்வி: பெண்கள் பற்றித் தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்..?**

பதில்: பரந்த மனப்பான்மை இல்லாதவர்களே பெண் இப்படி எல்லாம் முன்னேறக் கூடாது என்று முட்டுக்கட்டை போடுகிறார்கள்.



இதனால் பாதிக்கப்படுவது பெண்கள் தான். ஒரு பெண்ணின் முன்னேற்றத்தைத் தட்டிக் கொடுக்கா விட்டாலும் தட்டிக்கெடுக்காமல் இருக்க வேணும். பெண் நேர்மை, நீதி, நியாய வழிகளில் செல்லும் போதுதான் பிடிக்காதவர்கள் தேவையற்ற கதைகளைக் கதைத்து அவளது தன்னம்பிக்கையைச் சீகுலைத்து விடுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். சாதனைகளை யாரும் செய்யலாம். ஆண் தான் செய்ய வேண்டும் என்றில்லை. பெண்ணாலையும் முடியும் என்பதை நிரூபிக்க இத்தகைய தடைகளைப் படிகளாக்கி உயர வேண்டும்.

**கேள்வி: இக்காலப் பெண்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்...?**

பதில்: பெண்கள் மகத்தான சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் ஒவ்வொருவரும் முன்னேற வேண்டும். பிரச்சினைகளைக்கண்டு ஒதுங்காது எதிர் நீச்சல் போட வேண்டும். தங்கி வாழக்கூடாது. சுய முயற்சிகளில் ஈடுபட்டு சுயதொழில்களைச் செய்ய வேண்டும். எமது மண், தேசம், தமிழ் அடையாளங்களைச் சீகுலைக்காமல் எமது தமிழ்ப் பண்பாடடை நாம் என்றும் பேணிக்காக்க வேண்டும். அனைவரும் இதனைச் செய்யவேண்டும். ◆

## தோழிக்காக...

தோழியே...
இன்று வரை
உன் இதயத்தில்
புரட்டப்படாத
பக்கங்களைப் புரட்டு!

எத்தனை காலம் தான்
நீ மௌனியாக இருப்பாய்!

உனக்காக...
உன் வாழ்விற்காக
நீதான் போராடவேண்டும்.
உன் இதயத்தின் ரணங்களை
நீதான் மாற்றவேண்டும்.

நீ புதுமைப் பெண்ணாக
மாறாவிடினும்
உன்னையே நீ
அறிந்தவளாக மாறி விடு!

உன்
மனதின் தளைகளை
அறுத்தெறிந்து விட்டு
வெளியே வா.

சமூகத்திலிருந்து
விடுதலை கேட்கும் நீ
உன்னிலிருந்து
முதலில் மாற்றம் பெறு.

உனக்காக
வாழ்வின் வசந்தங்கள்
காத்துக் கிடக்கின்றன
தேடிப்பார்.....

- தீபா

# பெண்ணுக்கு அழகு அவசியம்தான்; அது வாழ்வைச் சிதைத்து விடக்கூடாது

அழகு பெண்களுக்கு மட்டும் தான் உரித்தான விடயம் என்று நினைக்கிறோம். அழகு பெண்களுக்கு அவசியம்தான். ஆனால், அழகை வைத்துக்கொண்டு இதுதான் வாழ்க்கை என்று தீர்மானிப்பது, புரியாத புதிர்தான்.

பெரும்பாலான பெண்கள் இன்று கல்யாணம் ஆகாமல் இருப்பதற்குக் காரணம், சீதனம் மட்டுமல்ல.

ஆண்கள் வெளியிடங்களில் சினிமா போன்றவற்றில் வரும் பெண்களை உற்று நோக்கி 'இவள் மாதிரி இருக்க வேண்டும்' என்று நினைப்பதும் ஒரு காரணம் தான்.

கல்யாணம் செய்து கொள்வதற்காக ஓர் ஆணுக்கு எத்தனை மணப்பெண்களைக் காட்டுகிறார்கள். 'இவள் வேண்டாம்' எனப் புறக்கணிக்கப்படும்போது அவளது




மனநிலை எந்தளவு தூரம் பாதிக்கப்படுகின்றது? இதை ஆண்கூடச் சிந்திப்பதில்லை. காரணம் அவர்கள் அழகுக் கவர்ச்சியில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆணுக்குக் கட்டாயம் ஒரு துணை தேவைப்படுகின்றது. வாழ்க்கை நடத்த, சந்ததிகளை உருவாக்க, வயதானபின் துணையாக இருக்க, அன்பு செய்ய, துனபங்களைச் சுமக்கும் சுமைதாங்கியாக இவ்வளவையும் ஏற்கும் பெண்ணுக்கு அழகு மட்டும் தகுதி என நினைத்துக்கொள்வது ஏன்?

அழகுதான் உயர்ந்தது என்ற எண்ணத்தில் பெண் பார்ப்பதையும், மனைவியான பின் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசுவதையும் நிறுத்திக்கொள்ளலாம் அல்லவா?

'என்ர மகனின் அழகுக்கு ராசாத்தி மாதிரி எத்தனை அழகான பெண்கள் வரிசையில் வந்தது. ஆனால் இவன போய் எங்கேயோ பிடித்துக் கொண்டுவந்திருக்கிறான்' என்ற ஆதங்கங்கள் மூலம் பெண்ணின் மன உணர்வுகளைச் சிதைக்காமல் இருக்கலாம்தானே.

அழகு புறத்தில் அல்ல, மனத்தில்தான் இருக்கிறது என்பதைப் பாதி ஆண்கள் புரிந்து கொள்வதில்லை. இதனால் பல ஆண்கள் பெரும்பாலும் தமது மனைவியை வெளியில் கூட்டிச்செல்வதில்லை. அருவருப்பான பூச்சியைப் பார்ப்பது போல வெறுக்கிறார்கள். குழந்தைகளுக்கு முன்னேயும் உறவினர்களுக்கு முன்னேயும் மனைவியை அவமானப்படுத்துவதன் மூலம் குழந்தைகள் மனமும் வெகுவாகப் பாதிக்கப்படலாம்.

என்வாழ்க்கைத் துணையை நான் தான் தேர்ந்தெடுத்தேன். இதில் மற்றவர்கள் பேசவோ, குறுக்கிடவோ உரிமை இல்லை என்ற எண்ணம் கணவன்மார்களுக்கு உண்டாகுமானால் மனைவி மதிப்பில் உயர்வாள்.

எப்போது என் மனைவி இவள்தான் எனக் கைபிடித்தீர்களோ அன்றுமுதல் அன்பின் உருவமாக உங்கள் பார்வையின் குளிர்ச்சியில் அழகு தேவதையாக நினைத்துக்கொள்வது உங்கள் கடமை. உங்கள் அன்பில் அவள குளிரக் குளிர மனம் மகிழ்ச்சியடையும். மனம் மகிழ்ந்தால்

மதியழகி

உடலுக்கு பொலிவு உண்டாகும்.

வெள்ளைதான் எவ்வளவு வடிவாக இருக்கிறாள். கறுப்பென்றாலும் கவர்ச்சியாக இருக்கிறாள் என எப்படியெல்லாம் நினைக்கிறோமோ அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடியாக மனம மாறவேண்டும்.

நிறவெறி பிடித்த நாடுகளில் ஏற்பட்ட கலவரங்களை அறிந்திருக்கிறோம். மனதில் ஏற்படுகின்ற வெறுப்பு உணர்ச்சி வெறியாகி விடுகிறது என்பது உண்மை, உஙகள் மனைவியாகுபவள் எப்படி எனத் திருமணத்திற்கு முன் தெரிந்துகொண்டு செல்லுங்கள்.

மற்றவர்களிடம் கேட்டுப் பெண்ணைப் பற்றி அறிவது கூட விபரீதமான எண்ணங்களுக்கு வழி கோலும். வேலை பார்க்கும் பெண்ணைப் பார்த்துவிட்டு கல்யாணத்திற்குப் பின் வேலையை விடுவாளா என்கிறார்கள். உங்களுக்கு வேலை பார்க்கும் பெண் வேண்டாமென்றால் வேறு பெண பாருங்கள். திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர். வழி வழியாக எம் மூதாதையர் கட்டிக்காத்த நடைமுறை. இதில் அழகுக்கு முதலிடம் எனத் தேவையற்ற விடயங்களைப் பேசி, மணவாழ்வை வீணாக்காது இருப்பதே நலம்.

உங்களுக்குப் பொருத்தமானவளாகத் தேர்ந்தெடுங்கள. மணமான பின்பு அழகைப் பற்றியோ, நிறத்தைப் பற்றியோ பேசி மனைவியை மனநோயாளி ஆக்காதீர்கள்.

குடும்பம் தென்றல் வீசும் பூங்காவாக இருக்க வேண்டும். புயல்வீசும் கடலாக மாறக்கூடாது. ☆



உ
சிவமயம்

## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்
## ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம்
## வருடாந்த தேவி மஹோற்சவம் - 2004

*அம்பிகை அடியார்களே!*

நிகழும் தாரண வருஷம் ஆனித்திங்கள் 28ஆம் நாள் (12.07.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மஹோற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

**மஹோற்சவ விவரம்**

*12-07-2004 திங்கட்கிழமை கொடியேற்றம் காலை 10.00 மணி*
*15-07-2004 வியாழக்கிழமை கைலாசவாகனம் மாலை 6.00 மணி*
*20-07-2004 செவ்வாய்க்கிழமை ரதோற்சவம் காலை 7.00 மணி*
*21-07-2004 புதன்கிழமை பூரகர்மம் (ருதுசாந்தி) காலை 7.00 மணி*
*தீர்த்தோற்சவம் காலை 9.00 மணி*
*கொடியிறக்கம் மாலை 7.00 மணி*

**மஹோற்சவ நாளான 10 தினங்களிலும் மாகேஸ்வர பூசை (அன்னதான மடத்தில்) நடைபெறும்.**

☞ அடியார்கள் அனைவரும் வருகைதந்து விழாவில் கலந்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் அறியத்தருகிறோம்.

*விழாக்கள் அனைத்தும் பழைய நேரப்படியே நடைபெறும்.*

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர். (சி-36264)(26-11)

ஆலய தர்மகர்த்தா,
ஆ.அம்பலவிமுருகன்.மு.சுந்தரலிங்கம்.

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்வி, கேள்விச் சபைத் தலைவரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2004. 07. 20ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| யா/மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை க.பொ.த. (உ/த) விஞ்ஞான ஆய்வுகூடம் 130'x25' கீழ்த்தளம் (மிகுதிவேலை) | ரூபா 500.00 | ரூபா 10000.00 |

1) மேற்படி வேலைக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் தரம் 9 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும்.
2) கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி(VAT), சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படவேண்டும்.
3) மேற்படி வேலைக்கான கேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி என்ற பெயரில் வங்கிக்கட்டளையைப் பெற்று (Pay Order) வடமராட்சி வலயப் பாடசாலை வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2004. 07. 12 ஆம் திகதி தொடக்கம் 2004. 07. 16 ஆம் திகதி வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4) இவ்வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனிக்கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடப்பக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்டு கேள்விப் பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரையிட்டு வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி என முகவரியிட்டு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 2004. 07. 20 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல்வேண்டும்.
   மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5) கேள்விச் சபையால் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 10 நாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் கேள்விக்கான ஒப்பந்தமொன்றைச் செய்து 4 மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல்வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் இவ்வேலை தொடர்பான மேலதிக விவரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகிறேன்.

பாடசாலைகள்
வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி. (சி-36266)(34)

வே.தி.செல்வரத்தினம்
கேள்விச் சபைத் தலைவர்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

## மனோபலத்துடன் ஆத்ம பலத்தையும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதைகளை எடுத்து உதாரணங்களாகக் கூறுவதன் மூலமே அவர்களது மனச் சிந்தனையைத் தூண்ட இயலும்.

மனித வாழ்க்கையின் தத்துவத்தை விளக்கும் வகையிலான கதை இது. வாய் அகன்ற வெற்றுப பாத்திரமொன்றில் பெரிய பாறாங்கல் ஒன்று, குறிப்பிட்ட அளவான குறுணிக்கற்கள், அவ்வித அளவு கொண்ட மணல் மற்றும் நீர் என்பவற்றை ஒன்றன்பின் ஒன்றாக இட்டு நிரப்பும் அதே சமயம், எந்த விதத்திலும் அப்பாத்திரம் முட்டி வழிந்து இப்பொருள்களில் சிறிதளவாவது வெளியே சிதறவிடக் கூடாது என்ற நிபந்தனையுடன மாணவர்கள் மத்தியில் போட்டியொன்று நடத்தப்பட்டது.

பல மாணவர்கள் அச்சவாலை ஏற்று அவசர அவசரமாக முயன்றுதோற்றனர். கடைசியில ஒரு மாணவன் பொறுமையாக, நிதானமாகச் சிந்தித்த பின்னர் அவ்வெற்றுப் பாத்திரத்தினுள் ஓர் ஒழுங்குமுறையில் முதலில் பாறாங்கல்லை நடுவில் வைத்து, குறுனிக்கற்களை பாறாங்கல்லைச் சுற்றிப் பரப்பிச் சமன்செய்த பின்னர் அவற்றின் மேல் மணலைத் தூவிச் சமன்செய்து மட்டப்படுத்திக் கடைசியாக மணல் மீது நிதானமாகத் தண்ணீரை மெதுமெதுவாக ஊற்றி நிபந்தனையை நிறைவேற்றி வெற்றி பெற்றான்.

இந்த உவமானக் கதையில் மனித வாழ்க்கை வெற்றுப் பாத்திரமாகவும், மனிதனின இலட்சியம் பாறாங்கல்லாகவும், மனிதனின் சந்தோசம் என்பது நீராகவும், படித்து கல்வியில் சிறந்து அதனால் பெறும்புகழ் மண்ணாகவும் சிறுகுறுனிக்கற்கள் மனித முயற்சியாகவும் சித்தரிக்கப்படுகின்றன.

### சிந்தித்துச் செயற்படுக

மனிதன் தனது வாழ்க்கையில் உயர வேண்டுமானால், எதையும் மனவுறுதியுடன் நிதானமாகச் சிந்தித்துத் திட்டமிட்டு உரிய முறையில் செயலாற்றினால் வெற்றி அவனைத் தேடிவந்தடையும் என்பதே இக்கதை உணர்த்தும் உண்மையாகும். மனிதனின் விருப்பம் நிறைவேற வேண்டுமானால், அவன் தனது இலட்சியத்தில் உறுதிப்பாட்டுடன், விடாமுயற்சியுடன் இயங்கமுடிந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

சுவாமி விவேகானந்தர் பாதம்பதித்த யாழ்.இந்துக்கல்லூரி மற்றும் சுவாமி விவேகானந்தரின் வழியில் வாழ்ந்து புகழ் ஈட்டிய சுவாமி விபுலானந்தர் ஆசிரியப் பணிபுரிந்த யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயிலும் அடக்கமும், பண்பும் நிறைந்த மாணவர்கள மத்தியில் விதைக்கும இக்கருத்துக்களை இந்நாட்டின் அனைத்து மாணவ மணிகளுக்குமே தெரிவிக்கப்படும் கருத்துக்களாகக் கொண்டு சுவாமி விவேகானந்தரின் உபதேசங்களின் வழியில் உங்கள் வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தி வாழ்க்கையில நீங்கள் உன்னத நிலையை ஈட்டிக் கொள்ள சுவாமி விவேகானந்தரின் ஆசிகள் என்றும் உங்களுக்கு துணைநிற்கும் என்றார். ✽

## மதுவரி அதிகாரிகள் சோதனை

அண்மையில் மண்டைதீவுப் பகுதியில் மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நடத்திய சோதனையில் அனுமதியின்றி விற்பனைக்காகப் பதுக்கி வைத்திருந்த சாராயப் போத்தல்கள் இரு இடங்களில் இருந்து மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-8)

## தென்மராட்சிப் பாடசாலைகளில் அறநெறிப் போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை9

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி (தரம் 1தொடக்கம் தரம் 5வரை) மாணவர்களுக்கிடையான வலய மட்ட அறநெறிப் போட்டிகள் நாளை காலை 9மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இவ்வாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-117)


**ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை மாதிரி வினாக்களின் தொகுப்பு**

**த.தவசேகா** B.Sc., P.G.Dip.in Ed.
யாழ்.மாவட்டத்தின் முக்கிய புத்தக நிலையங்களிலும் வகுப்புகளிலும் சனிக்கிழமை (10/7) முதல் கிடைக்கும்.
(33875)(11-19-21)



**இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**



ஸ்ரீ சோட்டாநிக்கரை, பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன் மீண்டும்

**P.T.R., சாமி இரட்டையர்கள்**

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப்பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

**ஸ்ரீ பாலாஜி விடுதி,**
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கன்னாதிட்டிச் சந்தி அருகில்).
தொலை.பே. 222-2341
*(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை).*
(33885)
(11-19-34-21)


**ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
04 - 02 - 1949

மறைவு
09 - 07 - 1995

திருமதி
**கணேசலிங்கம் கமலாதேவி**

மனிதத்தை நேசித்து
மனதிலே நிறைந்து
மறைந்து ஒன்பதாவது
ஆண்டை நினைவு கூருகின்றோம்.
- குடும்பத்தினர்.

*நவாலி றோட்,*
*நவாலி கிழக்கு, மானிப்பாய்.* (33675) (34-11-19-21)

**மூன்றாம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம்
12 - 03 - 1919



மறைவு
13 - 07 - 2001

கோப்பாய் வடக்கு
ஸ்ரீசக்கராழ்வார் தேவஸ்தான
முன்னாள் பிரதமகுரு

**திருமதி ஆறுமுகம் இராசம்மா**

(சாமிஅம்மா)

திதி: 9-7-2004 வெள்ளிக்கிழமை

மனிதரில் மாணிக்கமாய். மாநிலத்தில் வாழ்ந்தீர்
புனிதவாழ்வு வாழ்ந்து புண்ணியன் கழல் சேர்ந்தீர்
இனிய உமது முகத்தை. எம்மால்
மறக்கமுடியாது.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (9-7-2004) வெள்ளிக்கிழமை ஆலயத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும். கண்ணன மெய்யடியார்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரி ஓம் நமோ நாராயணா!

- ஸ்ரீ சக்கராழ்வார்
தேவஸ்தானம்.

*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (C/36267)(42)


## இலவசக் கருத்தரங்கு
## மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி **நளினி சிவகுமார்** (Advance Diploma In Herbal Beauty Culture) அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கையும் அழகுக்கலை தொடர்பான பாவனைப் பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கத்தையும் (தயாரிப்பு நிறுவனம் கிடைக்கும் இடங்கள் ) நடத்தவுள்ளார்.

**யாழ்ப்பாணத்தில்**

★ **இடம்: யாழ். Y.M.C.A. மண்டபம்**
**காலம்: 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி**

**வடமராட்சியில்**

★ **இடம்: இராஜலக்சுமி திரையரங்கு, நெல்லியடி**
**காலம்: 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி**

*அன்புடன் அழைக்கின்றோம்.*

*அனுசரணை வழங்குவோர்:*

யாழ். குடாநாட்டு மக்களுக்கு நற்சேவையாற்றிவரும
**பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி**

இலங்கையின் எப்பாகத்துக்கும் கேபிள் இணைப்புக்கள் இன்றி அன்ரனா மூலம் இயங்கக் கூடிய மேசைத் தொலைபேசிகளை வழங்கிவரும் 'பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி' யாழ். மக்களின் நன்மை கருதி 24 மணி நேரத்தில் இணைப்புக்களை வழங்கி வருகிறது. அதன் புதிய கிளை நிறுவனம் 205/1, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கொம்பிளக்ஸில் அமைந்துள்ளது.

# பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி

இது ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் இணை நிறுவனமாகிய மொபிட்டல் ஆகும்.

இங்கு கையடக்கத் தொலைபேசிகளுக்கான திருத்த வேலைகளும் அதன் உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம். சகல விதமான கையடக்கத் தொலைபேசிகளின் UNLOCK சீர் செய்து தரப்படும்.

Office
185,1st floor
kasthuriyar Road,
Jaffna.
Tel/ fax 021-2227070

SHOP
205/1, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 0712 399220

(36238)(32-11-19-21)

# எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியைப் பார்வையிட மக்களுக்கு அனுமதி

தென்மராட்சி,ஜூலை9

எழுதுமட்டுவாழ் தெற்கிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் தமது இருப்பிடங்களைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இப்பகுதியைச் சேர்ந்த 25 குடும்பங்கள் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்கள் பகுதிபகுதியாகத் தமது வீடுகளைப் பார்வையிட இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

படையினர் முகாமிட்டுள்ள பகுதிகளுக்குச் செல்லத் தாம் அனுமதிக்கப்படவில்லையெனவும் - பல வீடுகள், கூரைகள், கதவு நிலைகள் அகற்றப்பட்ட நிலையில் காணப்படுகின்றன என்றும் - நேரில் சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் உள்ள சில வீடுகள் சேதமின்றிக் காணப்படுகின்றன என்றும் -

பயன்தரு மரங்களில் பெரும்பாலானவை பாதிப்பின்றிக் காணப்படுகின்றன என்றும் - அவர்கள் மேலும் கூறினர்.

எழுதுமட்டுவாழ், சிவன் கோயில் பகுதிக்குச் செல்ல அனுமதிமறுக்கப்பட்டதால் அங்கு செல்லமுடியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - இப்பகுதியில் உள்ள தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்கள் நேற்றும், இன்றும் தமது தோட்டங்களைப் பார்வையிட அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பெண் சாரணர் பாசறை இன்று மாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

அகில இலங்கை பெண் சாரணியப் பாசறையில் கலந்துகொள்ளும் பெண் சாரணர்களைத் தெரிவுசெய்வதற்கான முன்னோடிப் பாசறை இன்று மாலை 4 மணி முதல் ஆரம்பமாகி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிவரை யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாசறை இன்று காலை 9மணிக்கு ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் வயிற்றுளைவால் பலர் பாதிப்பு

தென்மராட்சி,ஜூலை9

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாகக் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோர் வாந்தி மற்றும் வயிற்றுளைவு போன்றவற்றினாலும் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஜூன் மாதம் பெய்த சிறுசாரல் மழையையடுத்துக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இந்நோயாளர்கள் வயிற்றுளைவு மற்றும் வாந்தி போன்றவற்றாலும் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு வருகின்றனர். இதனால், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தினமும் காய்ச்சல், வயிற்றுளைவு, வாந்தி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறப் பெருமளவு நோயாளர்கள் ஆஸ்பத்திரிக்கு வருகை தருவதால் வார்ட்டுகளில் இடமின்மையால் நோயாளர்களுக்குப் போதிய சிகிச்சை வழங்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களாகியும் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் -

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் காய்ச்சலினால் பல தடவைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - நோயாளர்கள் தெரிவித்தனர். (ஒ-117)

# உடுவில் பகுதியில் இன்று முதல் மாடுகளுக்குத் தடுப்பூசி

உடுவில் கால்நடை மருத்துவர் பிரிவில் மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய்க்கான விசேட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தடுப்பூசிகள் ஏற்றப்பட உள்ள நாள்களும் இடங்களும் வருமாறு:-

இன்று வெள்ளிக்கிழமை - தாவடி பிள்ளையார் கோயிலடி, தாவடி முருகமூர்த்தி கோயிலடி, கிராம அலுவலர் பணிமனை -

எதிர்வரும் 12ஆம் திகதி - மயிலணி முருகமூர்த்தி கோயிலடி, சுன்னாகம் கிழக்கு ச.ச. நிலையம், சுன்னாகம் முத்தமிழ் மன்றம், கலைவாணி ச.ச.நிலையம், கல்லாக்கட்டுவன் ச.ச. நிலையம் -

எதிர்வரும் 13ஆம் திகதி - சுன்னாகம் ஐயனார் கோயிலடி முத்து கிருஷ்ணர் வீதி, விவசாய சம்மேளனத் தலைவர் இல்லம், பருத்திக் கலட்டி கோயிலடி, கந்தரோடை அருளானந்த பிள்ளையார் கோயிலடி -

எதிர்வரும் 15ஆம் திகதி - ஞானவைரவர் ச.ச.நிலையம், உதயசூரியன் ச.ச.நிலையம், கோட்டைகாடு ச.ச.நிலையம், கிராம அலுவலர் (J/203) பணிமனை, ஏழாலை - மயிலங்காடு ஞானவைரவர் கோயிலடி -

16ஆம் திகதி - ஏழாலை தேவாலயம் (கிராம அலுவலர் பணிமனை அருகில்), ஏழாலை வடக்கு, தபாற்கந்தோரடி -

19 ஆம் திகதி - புன்னாலைக்கட்டுவன் கணேசா ச.ச.நிலையம், ஐயனார் கோயிலடி மாத்தாளோடை, ஈவினை பிள்ளையார் கோயிலடி, ஈவினை கலையரசி ச.ச.நிலையம் -

21 ஆம் திகதி - குப்பிளான் வடக்குப் பிள்ளையார் கோயிலடி, குப்பிளான் தெற்கு, கிராம அலுவலர் பணிமனை -

ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ஒ-152)

## ஏழாலைப் பிரதேச நூலகத்தை பயன்படுத்துவோர் அதிருப்தி

வலி.தெற்குப் 'பிரதேச சபைக்குட்பட்ட ஏழாலை பிரதேச சபை நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நூல்களில் பெரும்பாலானவை பாவனைக்கு விடப்படவில்லை என நூலகத்தைப் பயன்படுத்துவோர் விசனம் தெரிவிக்கின்றனர். மேலும், பாடசாலை மாணவர்களின் நலன்கருதி கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள் புத்தகங்கள் பலவும் இந்நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், கடந்த இரு ஆண்டுகளாக வழங்கப்பட்ட கடந்த கால பரீட்சை வினாவிடைப் புத்தகங்கள் உட்பட எந்தப் புத்தகமும் இதுவரை பாவனைக்கு விடப்படாது அலுமாரிக்குள் முடக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (ஒ-150)




மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் து.ரகு, வட வலய விசேட நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறைநாதன், யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், சங்கானைக் கிளையின் முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை, சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா மற்றும் வங்கியாளர்கள் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம்:வலி.தென்மேற்குச் செய்தியாளர்)

## ஆசிரியவாண்மை விருத்தித் தினம்

வலி.வடக்கு,ஜூலை9

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரிய நிலையங்கள் இணைந்து நடத்தும் ஆசிரியவாண்மை விருத்தித் தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இரு தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள வாண்மை விருத்தித தின நிகழ்வுகளில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர். விசாகலிங்கம் பிரதமவிருந்தினராகவும், சிறப்புவிருந்தினராகத் தேசியக் கல்வி நிறுவக உதவிப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஐ.எல்.சினிகேயும் கலந்துகொள்வர்.

தேசியக் கல்வி நிறுவகச் செயற்றிட்டத் தலைவர் திருமதி லலிதா பட்டுவிட்ட, தமிழீழக் கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் க.அருள் மாஸ்ரர், தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், யாழ். பல்கலைக் கழகக் கல்வியியற்துறைத் தலைவர் பேராசிரியர் ம. சின்னத்தம்பி ஆகியோர் கலந்துகொள்வர். (எ-86-117)

# மந்திகை மருத்துவமனையில் 'ஈ,சீ,ஜி' எடுக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம்,ஜூலை9

பருத்தித்துறை, மந்திகை வைத்தியசாலையில் 'ஈ.சீ.ஜி' எடுக்கமுடியாத நிலை சுமார் ஒரு மாத காலமாகத் தொடர்வதால் இதயநோய் தொடர்பான நோயாளர்கள் சிரமத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பிரிவில் கடமையாற்றிய 'ஈ.சீ.ஜி.'தொழில நுட்பவியலாளர் நீண்ட விடுமுறையில் சென்றுள்ளார். அவருக்குப் பதிலாகத் தற்காலிகமாகவேனும் எவரும் நியமிக்கப்படவில்லை. முன்னர் 'எக்ஸ்றே' தொழில் நுட்பவியலாளர் நீண்ட விடுமுறையில் சென்றபோது அவர் சம்பந்தப்பட்ட பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளத் தவறியமையினால் வைத்தியசாலையின் 'எக்ஸ்றே' பிரிவு நிரந்தரமாகவே இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

'எக்ஸ்றே' எடுப்பதற்கு நோயாளரை அனுப்புவது போலவே ஈ.சீ.ஜி எடுக்கும் நோயாளர்களும் தற்போது யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இது போன்ற அசமந்தப் போக்கினால் மாவட்ட வைத்தியசாலைகளில் சிகிச்சையளிப்பதற்கான வசதிகள் யாவும் சீர்குலையும் அபாயநிலை தோன்றியுள்ளதாக மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ்.போதனாவைத்தியசாலையின் வேலைப்பழுவும் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-15)

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் கல்வி மேம்பாட்டுப் பேரவை அங்குரார்ப்பணம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு செ. ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மேற்படி பிரதேச மக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (-10)

## வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு நிதிஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூலை9

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு உள்ளூராட்சி மூலதன நன்கொடை நிதியாக ஒரு லட்சத்து 5ஆயிரத்து 800 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மூலதன நன்கொடையாக வழங்கப்பட்ட நிதி 68 சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளது. மலசலகூட நன்கொடை நிதியாக 18 ஆயிரத்து 828 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (8-185)

# கோண்டாவில் மருந்தகத்தில் நோயாளருக்குச் சிரமம்

வலி.வடக்கு,ஜூலை9

கோண்டாவில் அரசினர் மத்திய மருந்தகத்திற்குச் சிகிச்சைபெறச் செல்லும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

நோயாளர்கள் நீண்டவரிசையில் காத்திருந்து செல்லும் நேரம் பதிவை மேற்கொள்வதற்கு வேண்டிய எழுதும்தாளை எடுத்து வரும்படி திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்றும் -

சிலசமயங்களில் நோயாளர்களிடம் 'மருத்துவர் இன்று பார்வையிடமாட்டார், நாளை வாருங்கள்' என்று கூறித் திருப்பிஅனுப்பிவிடும் நிலைமையும் காணப்படுவதாகவும் - நோயாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் நோயாளர் மருந்துகள் எழுதுவதற்கான காகிதாதி இல்லை என்ற அறிவித்தல் எதுவும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

# ஆயுள்வேத மருந்தகங்களுக்கு நிதி

நெல்லியடி,ஜூலை9

வலி.வடக்குப் பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் ஆயுள்வேத மருந்தகங்கள் இரண்டிற்குச் சுதேச வைத்தியத்துறை அபிவிருத்தி அமைச்சின் நிதியிலிருந்து பத்து லட்சம் ரூபா நன்கொடையாகக் கிடைத்துள்ளது.

அளவெட்டி ஆயுள்வேத மருந்தகத்திற்கும் மல்லாகத்தில் இயங்கி வரும் மயிலிட்டி மருந்தகத்திற்கும் ஆயுள்வேத மருந்துகளைக் கொள்வனவு செய்யவே இவ்வொதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் இந்நிதியைப் பயன்படுத்தி மேற்படி இரு வைத்திய நிலையங்களுக்கும் தேவையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் தெரிவித்தார்.(ஒ-150)



நவாலி தெற்கு - தம்பனை மாரியம்மன் ஆலய வேள்வி அண்மையில் இடம்பெற்றது.

இந்த வேள்வியில் கடாக்கள் பலியிடப்படுவதற்காக டிராக்டர்கள் மற்றும் லான்ட் மாஸ்ரர்களில் கொண்டுவரப்பட்டு ஆலய முன்றிலில் நிறுத்தப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (10-185)

## கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

பவர் செல்லூலர் நிறுவனத்தின் ஆதரவுடன அழகுக்கலை தொடர்பான இலவசக் கருத்தரங்குகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு நெல்லியடி இராஜலக்ஷ்மி திரையரங்கிலும், பிற்பகல் 2 மணிக்கு யாழ். வை.எம்.சீ.ஏ.மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன. அழகுக்கலை நிபுணர் திருமதி நளினி சிவகுமார் அழகுக்கலை தொடர்பான பாவனைப் பொருள்கள், அவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள், அப்பொருள்கள் கிடைக்கும் இடங்கள் பற்றி இக்கருத்தரங்கில் விளக்கமளிப்பார். (10-201)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை9

கலாநிதி எட்வின் சவுந்தரா எழுதிய 'உருவ மெய்யியலும் மனிதனும்' எனும் நூலின் அறிமுகவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையினை மெய்யியல் இறுதி வருட மாணவன் சி.பத்மநாதன் நிகழ்த்துவார்.

நூலாசிரியர் கலாநிதி எட்வின் சவுந்தரா ஏற்புரை வழங்குவார். நன்றியுரையினை மெய்யியல்துறை இறுதிவருட மாணவன் ந.ராமதாஸ் நிகழ்த்துவார். (4-6)

## கிராம அலுவலர்களைச் சந்திக்கவும்

யாழ்ப்பாணம்,ஜூலை9

வலி.வடக்குப் பிரதேசத்தின் உயர் பாதுகாப்பு அரணுக்கு வெளிப்புறமாக 600 மீற்றர் எல்லைக்குள் வீடு, காணி மற்றும் விவசாய நிலங்கள் என்பவற்றைச் சொந்தமாக உடையவர்கள் அவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனோ அல்லது விளக்கக் கடிதத்துடனோ தத்தமது உடைமைகள் உள்ள பிரிவின் கிராம அலுவலரைச் சந்திக்குமாறு வலி. வடக்குப் பிரதேச செயலாளர் க.குணராசா கேட்டுள்ளார்.(10-201)

# இனஒழிப்பின் உச்சமான நவாலிப் படுகொலைகள்

**9-07-95இல் இடம்பெற்ற நவாலி தாக்குதலின் 9ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று ஆகும்.**

நவாலி புனித பேதுருவானவர் தேவாலயம மீதான தாக்குதலின் 9ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

வரலாற்றில் அந்த இரத்தக்கறை படிந்த நாளின் துன்ப, துயரங்களை இலகுவில் மறந்து விடமுடியாது.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பேற்றுக் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழர் மீதான இனக்குரோதப் படுகொலை இதுவாகும்.

ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் மூன்று இந்தக் கோரத் தாக்குதலை மேற்கொண்டன.

'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையினை யாழ். குடாப் பகுதியில் வலிகாமம் ஊடாக ஆரம்பித்தனர் இராணுவத்தினர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்தும் அளவெட்டி, சண்டிலிப்பாய்ப் பகுதிகளிலிருந்தும் ஊர்மனை நோக்கி நாலாபுறமும் மிகக் கொடூரமான முறையில் ஷெல்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

திடீரென 09.07.1995 அன்று வலிகாமம் தென்மேற்கு, வலி.மேற்கு, வலி.தெற்கு பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் நோக்கி காலை 5.40 மணியளவில் இருந்து மும்முனைத் தாக்குதல்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

அன்றையதினம் காலை வலிகாமம் பகுதியில் உள்ள மக்கள் உடுத்த உடைகளுடனும, அகப்பட்ட உடைமைகளுடனும் கண்ணீரும்



கம்பலையுமாக இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். மாட்டுவண்டில்களிலும். சைக்கிள்களிலும், கால்நடையாகவும், லான்ட் மாஸ்ரர்களிலும் வட்டுக்கோட்டை, நவாலி வீதி, வழுக்கையாறு வெளி, நவாலி - ஆனைக்கோட்டை பிரதான வீதி, கட்டுடை - மானிப்பாய் பிரதான வீதி ஆகியவற்றின் வழியாக அவர்கள் சென்றனர்.

அவ்வேளையில் சகல வீதிகளிலும் தாக்குதல்கள் நடந்தன. வீதிக்குவீதி சடலங்கள், காயமடைந்தவர்களை எடுத்துச் செல்லக்கூடிய அளவிற்கு வாகன வசதிகளோ, மருந்தகங்களோ, வைத்தியசாலைகளோ இல்லை. காயமடைந்தவர்கள் சிகிச்சை இன்றி இறந்த கொடுமைகளும் நடந்தன.

அன்றையதினம் குடாநாட்டின் பல்வேறு வீதிகளின் ஊடாக நவாலி புனித பேதுவானவர்

**நவாலியூர் செல்வராஜா ரமேஷ்**

ஆலயத்திலும், நவாலி சின்னக் கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்தோர் தஞ்சமடைந்தனர்.

அவ்வேளையில் விமானம் மூலம் 13 குண்டுகள் தொடர்ச்சியாக இரு ஆலயங்கள் மீதும் பொழியப்பட்டன.

சிறிது நேரத்தில் அவலக் குரல்கள் அப்பகுதியை அதிரவைத்தன. 147 பேர் உடல் சிதறிக் கை இழந்து, கால் இழந்து, தலையிழந்து, குற்றுயிராகக் கிடந்த கொடூரக்காட்சி இன ஒழிப்பு நடவடிக்கைக்குச் சாட்சியாக அதிரவைத்தன. இந்தக் கொடூரச் சம்பவத்தில் 147 பேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர்.

அவர்களது ஞாபகார்த்தமான இன்று நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்திலும் நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

இத்தாக்குதலின் நினைவாக நவாலி வடக்கு - புலவர் வீதியிலும், நவாலி புனித பேதுருவானவர் தேவாலய வீதியிலும் இனப்படுகொலை நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ✳


**இயற்கை (மூலிகை) சிறப்பு வைத்தியம்**

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சைமூலம் ஆஸ்துமா, உடல் பருமன், உடல் மெலிவு, சலரோகம், இளநரை, தலைமுடி உதிர்தல், முகப்பரு, மாதவிடாய்ப் பிரச்சினைகள், தலையிடி, வாதம், நாரி உளைவு, கை, கால் விறைப்பு மற்றும் தீராத இதர நோய்களிலிருந்து எந்தவித பக்கவிளைவுகளுமின்றிப் பரிபூரணமாகக் குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தீராத தோல் நோய்கள், மூல வருத்தம், ஆண்மைக் குறைவு, யானைக்கால் நோய் போன்றவற்றிக்குச் சிறப்பு வைத்தியம் செய்யப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
Dr.R.K. நவநீதன் DYNS: Smp: NC
(இயற்கை மூலிகை மருத்துவநிபுணர்)
54, மணிக்கூட்டு வீதி,
யாழ். பயணியர் விடுதி
(வெலிங்டன் சந்தி, முனீஸ்வரா கபே அருகில்),
யாழ்ப்பாணம். T.P. No.: 0777 491049

ஒவ்வொரு மாதமும் முன்பதிவுசெய்து யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்.

(33935) (24-18-11)

யாழில் டாக்டரைச் சந்திக்கக்கூடிய நாள்கள்:
03.07.2004 முதல் 11.07.2004 வரை



**London English College**
No. :- 105, Arasady Road, Jaffna.
T.P. :- 222-5889, 0777-252180, 0776-303539

எதிர்வரும் 12.07.2004 முதல் யாழ். நகரில் British முறையினைப் பின்பற்றிய ஆங்கிலக் கற்கைநெறி

Listening | Speaking | Reading Comprehension | Lanuage Structure | Discussion Writing | Educational Excursion | Kids and Professional

மாணவர், பெற்றோர்களுக்கான விசேட கருத்தரங்கு 9,10,11 அன்று காலை 9.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் கல்லூரிக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சிறுவர்களுக்கான வகுப்புக்கள்

காலை, மாலை, வார இறுதி நாள்கள் மற்றும் உயர்நிலைப் பதவியில் உள்ளவர்களுக்கான தொடர்பாடல் வகுப்புக்களும் நடைபெறும்.

இலவசம் அடிப்படை கணனி நெறி எம்மால் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் பாடங்களுக்கான கற்கை இதழ்களும் (Learning Mateials) வழங்கப்படும்.

மேலதிக விவரங்கள் நளைய உதயனில்

BCNS No. 229A, Mitcham Road, Tooting SW 17910 London, U.K.


## நெடுந்தீவு பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வீதித் திருத்த வேலைக்குப் பதிவுசெய்யப்பட்ட (இக்ராட்) ஒப்பந்தகாரரிடமிருந்தும் உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாரர், ஒப்பந்த வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்கள் என்பனவற்றிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *செயலாளர், பிரதேசசபை, நெடுந்தீவு* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கும் 28.07.2004ஆம் திகதி பிற்பகல் 4.00மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல்வேண்டும். 29.07.2004ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படும். கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் ஒப்பந்தகாரர்கள் சமுகமளித்திருக்கலாம். கேள்விப் பத்திரங்கள் 28.07.2004ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிவரை வழங்கப்படும்.

| இல. | வேலையின் பெயர் | கேள்வி வைப்பு | கேள்விப் பத்திரப் பணம் | பொருள்கள் சேவைகள் (வரி) |
|---|---|---|---|---|
| 01. | நெடுந்தீவு காளாமுனை வீதி திருத்தவேலை | 4000/- | 400/- | அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம். |

மேலதிக விவரங்களை நெடுந்தீவுப் பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம். கேள்வியை ஏற்கவும் நிராகரிக்கவும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

நெடுந்தீவுப் பிரதேச சபை,
நெடுந்தீவு.
08. 07. 2004.

ச.பொ.தில்லைநாதன்,
செயலாளர்,
பிரதேச சபை, நெடுந்தீவு.

(சி-36251) (24-18-11)


உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

NEW KAMAAL CERAMICS,
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

JAFFNA CERAMICS,
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

VENKE IMPEX,
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

LWL லங்கா வோல்டைல் லிமிரெட்,
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்

# லெப்.கேணல் கங்கை அமரன், மேஜர் தசா நினைவாலயம் கிராஞ்சியில் திறப்பு!

வேரவில்,ஜூலை9

2001 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் கங்கை அமரன் மற்றும் மேஜர் தசா ஆகியோரின் நினைவாக கிராஞ்சியில் மாவீரர் நினைவாலயம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த மாவீரர்கள் இருவரினதும் மூன்றாம் ஆண்டு நினைவுதினமான கடந்த 29 ஆம் திகதி இந்த நினைவாலயம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நினைவு தினத்தை ஒட்டி கடந்த 28 ஆம் திகதியும் 29 ஆம் திகதியும் கிராஞ்சியில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. 29 ஆம் திகதி மாலை நினைவாலயம் திறந்துவைக்கப்பட்டதுடன் அங்கு நினைவுரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழீழ இசைக்குழுவினரின் இசை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4-404)

## விசுவமடுப் பிரதேச முன்பள்ளிகள் புனரமைப்பு

விசுவமடு,ஜூலை9

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் சமூகப் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கும் பன்னிரண்டு முன்பள்ளிகளும் இரண்டு பகல் பராமரிப்பு நிலையங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்காக முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சமூக, பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தினர் தெரிவித்தனர். (-4-404)

## நீண்டநாள் வரட்சிக்குப் பின்னர் கரும்புலிகள் தினத்தன்று மழை!

ஒட்டுசுட்டான்,ஜூலை9

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நீண்டநாள்களுக்குப் பிறகு கடந்த 5 ஆம் திகதி கரும்புலிகள் தினத்தன்று இடியுடன் கூடிய பெருமழை பெய்துள்ளன.

மழை இல்லாததால் இப்பகுதியில் குளங்களின் நீர்மட்டம் குறைந்து வாய்க்கால்கள் வற்றி, பயிர்கள் அழிவடையும் நிலையில் இருந்தது.

பயன்தரும் மரங்கள் பலவும் வரட்சி தாங்காமல் கருகிப்பட்டுப் போய்விடும் நிலை காணபட்டது.

இதனால், விவசாயிகளும் ஏனையோரும் கவலையடைந்திருந்தனர். இந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி கரும்புலிகள் தினத்தன்று திடீரெனப் பெய்த கடும்மழையால் பயிர்களும், மரங்களும் தப்பிப் பிழைத்துக்கொண்டன. தற்போது மாரிகாலம் இல்லாதபோதிலும் கரும்புலிகள் தினத்தன்று இப்பகுதியில் மழை பெய்தமை குறித்து இப்பகுதி மக்கள் ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

கரும்புலி மறவர்களுக்கு இயற்கை அன்னையின் கண்ணீர் அஞ்சலியே இதுவென்று மக்கள் பேசிக்கொண்டனர். (-4-341)

## 400 மாணவர்களுக்கு 4 ஆசிரியர்கள்

## 84 வருடங்கள் பழைமை வாய்ந்த பாடசாலையின் அவலம் இது!

வேரவில்,ஜூலை9

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராஞ்சி அ.த.க.பாடசாலையில் 400 வரையான மாணவர்கள் கற்கும் நிலையில் 4 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

1920 ஆம் ஆண்டு தரம் 5 வரையான வகுப்புகளுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

1999இல் தரம் 9 வரை வகுப்புக்கள் தரமுயர்த்தப்பட்டன. தரம் உயர்த்தப்பட்டதிலிருந்து இதுவரை தமிழ், கணிதம், விஞ்ஞானம் போன்ற பிரதான பாடங்களிற்குக்கூட ஓர் ஆசிரியர்களும் நியமிக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலை ஆளணி வளத்தால் மட்டுமல்லாது பொருளாதார வளத்தாலும் மிகவும் பின்தங்கியே உள்ளது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலையின் வகுப்பறைகள் திறந்த வகுப்பறைகளாகக் காணப்படுவதுடன் நிலம் குண்டும் குழியுமாகவே உள்ளது. மாணவர்கள் தளபாடவசதிகள் இன்றி பழைய கிழிந்த பாய்களில் இருந்தே கற்கின்றனர்.

வன்னிச் செய்திகள்

மிக அவசியத் தேவையான மலசலகூடங்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் இருப்பதால் இயற்கைக்கடன்களைக் கழிப்பதற்காக மாணவர்கள் அருகிலுள்ள பற்றைக் காடுகளைப் பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலையும் இப்பாடசாலையில் காணப்படுகிறது.

இப்பாடசாலையில 75 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆசிரியர் விடுதி ஒன்று உள்ளது. அதன சுவர்களும், நிலங்களும் வெடித்து மனிதப் பயன்பாட்டுக்கு உதவாததாகக் காணப்படுகின்றன. இதனால், வெளியூர் ஆசிரியர்கள் தங்கிக் கற்பித்தலைச் செய்யமுடியாதுள்ளது.

கிளிநொச்சி நகரத்தை அண்டிய பாடசாலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதுபோன்ற கிராமப்புறப் பாடசாலைகள் புறக்கணிக்கப்படுகிறமை வேதனைக்குரிய விடயம் என்றும் -

இப்பாடசாலை மாணவர்களின் எதிர்காலம் கருதி சம்பந்தப்பட்ட கல்விசார் அதிகாரிகள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இதுபோன்ற கிராமப்புறப் பாடசாலைகளில் தமது அக்கறையைச் செலுத்தவேண்டும என்றும் இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (4-202-404)

## அக்கராயன்குளம் மருத்துவமனைக்கு தொலைபேசி இணைப்பு

ஸ்கந்தபுரம்,ஜூலை9

அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலைக்கு கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவசர சந்தர்ப்பங்களில் வைத்தியர்களை அழைக்கவும் இதர தேவைகளுக்காகவும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளவேண்டிய நிலையில் இந்த வைத்தியசாலையில் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. இதனையடுத்தே இங்கு 'மொபிரல்' தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(4-202-381)

## மழைகாலம் ஆரம்பித்தால் சாளம்பன்குளம் உடையும்!

### அணைபோட்டுத் தடுக்குமாறு மக்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள சாளம்பன்குளம் மழைகாலம் ஆரம்பிக்கும்போது உடைபபெடுக்கக் கூடிய நிலையில் இருக்கிறது.

இந்தக் குளத்தின அணைக்கட்டுக்கள் மறறும் குளத்திலிருந்து நீர் செல்லும் வாய்க்கால்களும் சேதமடைந்திருக்கின்றன.

இதனால், அடுத்த மாரிகாலம் தொடங்கும் போது அந்தக் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து, குளக்கட்டுக்களையும் வாய்க்கால்களையும் உடைத்துக்கொண்டு குடிமனைகளுக்குள் புகுந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

அத்தகைய நிலை ஏற்பட்டால் அப்பகுதியிலுள்ள மக்கள் பெரும்சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், வயல்களிலுள்ள பயிர்களும் வயல்களும் அழிந்துவிடக்கூடிய சூழ்நிலை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் குளத்திற்கு மண் அணைகளைப் போட்டு குளக்கட்டுக்களைப் பலப்படுத்துமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இதனைப் புனரமைக்க வேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (4-341)

# இங்கிலாந்து அணியை டெஸ்ட் தொடரில் வெல்வதே இலக்கு

லண்டன்,ஜூலை9

முத்தரப்புத் தொடரில் கிண்ணத்தை வெல்வது, டெஸ்ட் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்துவது - இவை இரண்டும்தான் எங்களது அடுத்த இலக்கு என்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் லாரா தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு நியூசிலாந்து அணி ஏற்கனவே, தகுதி பெற்றுவிட்டது. லோட்டர்ஸ் மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் மேற்கிந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. இங்கிலாந்து அணி தொடரில் இருந்து பரிதாபமாக வெளியேறியது.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டி லோட்டர்ஸ் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. அதறகுப் பிறகு 22 ஆம் திகதி முதல் இங்கிலாந்து - மேற்கிந்திய அணிகள் கலந்துகொள்ளும் டெஸ்ட் தொடர் ஆரம்பமாகிறது. சமீபத்தில் மேற்கிந்தியாவுக்கு சுற்றுப் பயணம் சென்ற இங்கிலாந்து அணி அங்கு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றித் திரும்பியது. இப்போது பழிக்குப் பழிவாங்க ஆசைப்படுகிறார் லாரா.

கடந்த முறை எங்கள் மண்ணில் வைத்து டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதால் கூடுதல் நம்பிக்கையுடன் இந்த டெஸ்ட் தொடரை இங்கிலாந்து சந்திக்கும். ஆனால், எங்கள் அணியில கெயல, சர்வான் ஆகிய இளம் வீரர்கள் மிகப் பிரமாதமாக விளையாட ஆரம்பித்து விட்டனர். இதுதவிர, இங்கிலாந்தை வீழ்த்தி, இறுதிப் போட்டியில் நாங்கள் நுழைந்திருப்பது, நிச்சயம் மனரீதியாக எங்கள் பலத்தை அதிகப்படுத்தும். சொந்த மண்ணில் தோற்றதற்குப் பழிக்குப் பழியாக இம்முறை இங்கிலாந்தை டெஸ்ட் தொடரில் வெல்வோம். அதற்கு முன் முத்தரப்புத தொடரில் கோப்பையைக் கைப்பற்றப் போராடுவோம் என்று லாரா தெரிவித்துள்ளார். (10)

விளையாட்டு

## பற்றீசியன் அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜூலை9

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்திய ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.பற்றீசியன் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் பற்றீசியன் அணிக்கும் யங் ஸ்ரார் அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் செல்வின் லொயிட் 54 ஓட்டங்களை எடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங் ஸ்ரார் அணி ஒரு விக்கெட்டை இழந்து 58 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் துஸ்யந்தன் 30 ஓட்டங்களையும் தினேஸ் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (10-190)

## கரும்புலிகள் தின உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை9

கரும்புலிகள் தினத்தையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி மன்னார், மாநதை அணியை 2-1 என்ற கணக்கில் வெற்றியீட்டியுள்ளது.

முல்லைத்தீவு பொதுவிளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெற்றது. (-10-190)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்.மாவட்ட உதைப்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

★ மாலை 4.15 மணி யாழ்.பல்கலைக்கழகம் எதிர் சென்.அன்ரனிஸ் வி.க.

★ மாலை 5.15 மணி பொற்பதி வி.க. எதிர் கலைவாணி வி.க.

(10-190)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

★ மாலை மணி - சென்றலைட்ஸ் வி.க. எதிர் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு அணி.

★ மாலை 5 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் வடமராட்சி வி.க.

(-10)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டம் வருமாறு:-

★ மாலை 5 மணி - நாவற்குழி அருள் வி.க. எதிர் கைதடி விநாயகர் வி.க.

(-10-75)

## பாகிஸ்தான் அணியில் சொயப் அக்தருக்கும் இடம்

கராச்சி,ஜூலை9

கொழும்பில் அடுத்தவாரம் முதல் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர் சொயப் அக்தர் இடம்பெற்றுள்ளார்.

நூறு சதவீத உடற்தகுதியுடன் இருந்ததாலேயே அக்தரை அணியில் சேர்த்துள்ளோம் என அணியின் தேர்வுக்குழுத் தலைவர் வசிம் பாரி தெரிவித்துள்ளார்.

அணி விவரம் :- யாசிர் ஹமீட், இம்ரான் ஃபர்ஹத், இம்ரான் நசீர், யூனிஸ்கான், இன்சமாம் உல் ஹக், யூசுப் யொஹானா, மொயின் கான், அப்துர் ரசாக், சொயப் மாலிக், ராணா நவீத் உல் ஹசன், சொயப் அக்தர், முகமது சமி, சபீர் அஹமது டனிஷ் கனேரியா. (10)

## ஆசியக்கிண்ணப் போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு

சென்னை,ஜூலை9

எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள இந்திய அணி எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இதற்கான 14 பேர் கொண்ட இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் கலந்துகொண்ட 20 வீரர்களில் இருந்து இந்த 14 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆசியப் போட்டிக்கான 14 பேர் கொண்ட இந்திய அணி வருமாறு:-

கங்குலி, டிராவிட், டெண்டுல்கர், ஷேவாக், லக்ஷமன், யுவராஜ், பார்த்தீவ் பட்டேல், சகீர் கான், கும்ப்ளே, ஹர்பஜன் சிங், இர்பான் பதான், எல்.பாலாஜி, ஆசிஷ் நெஹ்ரா. (10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை9

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு யாழ். மாநகரசபையில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும சகல உள்ளூராட்சி உதவியாளர்களையும் இதில தவறாது கலந்துகொள்ளுமாறு உள்ளூராட்சி உதவியாளர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (ஏ-185)

## ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜுலை9,

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அரச தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரியர் சேவை 3-11 வகுப்பைச் சேர்ந்த தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர் வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மேற்படி பரீட்சைக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து 9 ஆயிரத்து 206 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 62 பரீட்சை நிலையங்களில் இந்தப் போட்டிப் பரீட்சை இடம பெறும். (எ-7)

## பண்ணை வீதித் திருத்த பணிகள் ஆரம்பம்

அரியாலை,ஜுலை9

யாழ். தொலைத் தொடர்பு நிலையத்துக்கு செல்லும் பண்ணை வீதிகளைத் தார் ஊற்றி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் புல்லுக்குளத்திற்கும் திறந்தவெளி அரங்கிற்குமிடையில் யாழ் பொலீஸ் நிலையத்துக்கு செல்லும் வீதியை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருக்கும் இந்த வீதியை புனரமைப்பதற்கு முன்னேற்பாடாக கற்கள் குவிக்கப்பட்டு வருகின்றன. (எ-17)

## வானதி வெளியீட்டகத்தின் பரிசளிப்பு நிகழ்வு

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் மூத்த பெண் படைப்பாளிகள் கௌரவிப்பும், இவ்வாண்டுக்கான இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் சு.தமிழினி, 'வெளிச்சம்' ஆசிரியர் கருணாகரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர் (எ-201)

## ஹெல உறுமய எம்.பிக்கு எதிரான இடைக்காலத் தடை ரத்து

கொழும்பு,ஜுலை9

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண.அக்மீமன தயாரத்ன தேரர் எம்.பியாக செயற்படுவதற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் ரத்துச் செய்துவிட்டது.

ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வணரத்தொளுவரத்னசீலதேரர் மேற்படி வண.அக்மீமன தயாரத்ன தேரருக்கு எதிரான இடைக்கால தடையுத்தரவை கடந்த மாதம் பெற்றிருந்தார்.

"ஜனநாயக முறைப்படி பொதுமக்களால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட தன்னிடம் பலாத்காரமாகவே இராஜினாமாக் கடிதம் பெறப்பட்டது அந்த இடத்திற்கு வண.அக்மீமன தயாரத்னதேரர் நியமிக்கப்பட்டுள்ளார். இது சட்டவிரோதமானது. எனவே வண.அக்மீமனதேரர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்வதை தடை செய்யவேண்டும்". - என வணரத்தொழுவரத்னசீல தேரர் நீதிமன்றத்தில் மனு செய்ததை அடுத்து மேற்படி இடைக்காலத் தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

அதேவேளை ரத்தொழுவ ரத்னசீல தேரர் இந்த இடைக்கால தடை உத்தரவை நிரந்தரமான தடை உத்தரவாகப் பிறப்பிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் புதிய மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்றுமுன்தினம் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.எஸ்.சமரகோன் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நிரந்தர தடை உத்தரவை வழங்க மறுத்த நீதிபதி இடைக்கால தடை உத்தரவையும் ரத்துச் செய்தார். மனுமீதான விசாரணையை ஓகஸ்ட் மூன்றாம் திகதிக்கு அவர் ஒத்தி வைத்தார். (க)

நவாலி
படுகொலை
09 - 07 - 1995

நவாலி தேவாலயம் மீதான தாக்குதலில் பலியான
அமரர் செல்வி ஹேமலதா செல்வராஜா
(கிராம அலுவலர் நவாலி வடக்கு),
செல்வன் சாம்பசிவம் பிரதீஸ்
(மாணவத் தலைவன் நவாலி .மகா.வித்தியாலயம்)
ஆகியோரின் 9 ஆம் ஆண்டு நினைவு நாளை
இன்று நினைவு கூறுகின்றோம்.

புலவர் வீதி
நவாலி வடக்கு.

திருமதி செ. செல்வராணி குடும்பம்
(நவாலி HSCMF நிறுவனம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கைதடி சித்தமருத்துவத்துறையில் அமைந்துள்ள ஆண்கள் விடுதி புனரமைப்பு - கட்டம் 1 வேலைகளுக்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் எம்7 (M7) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரங்கள் பெறத் தகுதியுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் / நிர்வாகம் அவர்களிடமிருந்து 26.07.2004 வரை செல்லுபடியான ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

01. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 30,000/-
02. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 1,000/-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 08.07.2004 அன்று காலை 10.00 மணிக்கு முன் *தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது *யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள்* இடப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மேலுறையில் பணி விவரம் எழுதப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றி கேள்விதாரர் பரிசீலிக்க முடியும்.

*துணைவேந்தர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

தபால்பெட்டி இல. 57,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி-36275)(24-12-11-40)

## இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல்

தோற்றம்
03 - 10 - 1942



மறைவு
04 - 07 - 2004

### அமரர் சண்முகம் சிவப்பிரகாசம்

அவர்களின் இறுதிச்சடங்கும் இரங்கல் வழிபாடும் 10.07.2004 சனிக்கிழமை பி.ப.2 (சுவிஸ் நேரம்) மணிக்கு சுவிற்ஸர்லாந்து புஸ்விலிலும் பிற்பகல் 4 மணிக்கு இல.06, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி.சதீஸ்வரன் *(மகன் - கொழும்பு)*
T.P.: 0776051027.
சி.ராஜன் *(மகன் - சுவிஸ்)*
T.P.: 0041323840473.

(சி-36272)(26-12-11-40)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவராஜா

(உரிமையாளர் - மல்லிகா மிக்சர் மாளிகை, யாழ்ப்பாணம் - மானிப்பாய்)



வேலணை, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராஜா அவர்கள் 07.07.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் ரோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தேவிகாராணியின் பாசமிகு கணவரும் தெய்வீகராஜாவின் (சணா) அன்புத் தந்தையும் மாணிக்கராஜா (ஆஸ்திரேலியா), செல்வராணி மல்லிகாதேவி, நவரட்ணராஜா (ஆஸ்திரேலியா), நித்தியலக்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னலட்சுமி (ஆஸ் திரேலியா), காலஞ்சென்ற குலசிங்கம் (குலம் கிறீம் ஹவுஸ்) மற்றும மனோகரன் (மல்லிகா ஸ்ரோஸ் - மானிப்பாய்), பிரான்சிஸ் (கனடா), இரத்தினஜோதி, இந்திரஜோதி (கொழும்பு), இராஜினிதேவி (கொழும்பு), ஆனந்தஜோதி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சறோஜினிதேவி, கிருபாதேவி, இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் முகுந்தராஜா, மோகனராஜா, பிரிதிவராஜா, மைதிலி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் மோகனபிரகாஸ், சிவாஜினி, கஸ்தூரி, லக்சி, துளசி, ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப், சாலினி ஆகியோரின் பாசமிகு குட்டி அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்லிகா மிக்சர் தொழிலகம்*
*கூளாவடி, ஆனைக்கோட்டை.* (33939)(40-11-12)

தகவல்:
-குடும்பத்தினர்.

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்
யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

### சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்விகோரல்

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம்பெறும் குடும்பங்களுக்கான 2004, ஏப்ரல் மாதத்திற்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான சிவப்பு நாட்டரிசியை (புழுங்கல்) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவுசெய்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டியதொகை கீழேகுறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவுமாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு ஏப்ரல் (MT) |
|---|---|---|
| 01. | சாவகச்சேரி | 190 |
| 02. | கைதடி | 70 |
| 03. | கொடிகாமம் | 135 |
| 04. | உடுப்பிட்டி | 32 |
| 05. | கட்டைவேலி-நெல்லியடி | 45 |
| 06. | பருத்தித்துறை | 114 |
| 07. | புலோலி | 27 |
| 08. | மருதங்கேணி | 80 |
| 09. | யாழ்ப்பாணம் | 311 |
| 10. | நல்லூர் | 161 |
| 11. | அச்சுவேலி | 154 |
| 12. | நீர்வேலி | 115 |
| 13. | மானிப்பாய் | 131 |
| 14. | பண்டத்தரிப்பு | 90 |
| 15. | அளவெட்டி-மல்லாகம் | 64 |
| 16. | தெல்லிப்பழை | 150 |
| 17. | சங்கானை | 183 |
| 18. | சுன்னாகம் | 196 |
| 19. | புங்குடுதீவு-நயினாதீவு | 40 |
| 20. | வேலணை | 45 |
| 21. | ஊர்காவற்றுறை | 70 |
| 22. | காரைநகர் | 55 |
| 23. | தீவகம் | 12 |
| 24. | நெடுந்தீவு | 30 |
| | மொத்தம் | 2500 |

2. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.07.09 ஆம் திகதி தொடக்கம் 2004.07.22 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரச அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
3. மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரச அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருததல்வேண்டும் என்பதுடன் அவை கேள்விபற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் (அரச அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால்உறையில் நேரடியாகவோ/தபால்மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2004.07.23 பி.ப.2 மணிக்கு முன்பாக சேர்த்தல்வேண்டும். அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.
6. கேள்விப் பத்திரத்தின் தபால்உறையில் இடதுபக்க மேல மூலையில் *"சிவப்பு நாட்டு புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி"* என எழுதப்படல் வேண்டும்.
7. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
9. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
10. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட
செயலகம், யாழ்ப்பாணம்.

08.07.2004

(சி-36276)(34-11-12-40)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா பூமணி

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியைப பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா பூமணி நேற்று (08.07.2004) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா நடராசாவின் அன்பு மனைவியும் குலவீரசிங்கம் (பிரான்ஸ்), குணபாலசிங்கம் (பிரான்ஸ்), புஸ்பராணி (நோர்வே), பூபாலசிங்கம் (பிரான்ஸ்), காராளசிங்கம் (நல்லூர் ப.நோ. கூட்டுறவுச் சங்கம்), ஜெயராணி, தேவானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராதாராணி (பிரான்ஸ்), புவனமகாதேவி (பிரான்ஸ்), சர்வேந்திரன் (நோர்வே), மகாலட்சுமி (பிரான்ஸ்), லிங்கமலர், குநாநந்தராஜா (மக்கள் போக்குவரத்துச்சபை - வவுனியா), வனைஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
காராளசிங்கம்
(மகன் -குட்டி)

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (C/36105)(43-13-14-37)

## திருமதி பொன்னம்மா ஆறுமுகம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா ஆறுமுகம் 07.07.2004 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும் சிவனேசன் (லண்டன்), தவனேசன் (சட்டத்தரணி-கொழும்பு), விஜயலக்ஷமி (சட்டத்தரணி-லண்டன்), பாமதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லாலாகோபிராதா (லண்டன்), ருக்மணி மகேஸ்வரி (சட்டத்தரணி-கொழும்பு), இரத்தினசிங்கம் (சட்டத்தரணி-லண்டன்), கமலநாதன் (சட்டத்தரணி-கொழும்பு) ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி, காலஞ்சென்ற குமாரசாமி, கனகாம்பிகை, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஞ்சினி, நந்தினி, லக்ஸ்மன், சஞ்செய், காலஞ்சென்ற லவன், தர்ஷினி, குமரன், மேனகா, பார்த்திபன், ஜெயந்தன் ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2004) சனிக்கிழமை மாலை 4 மணியளவில் **19, Mile Post Avenue,** கொள்ளுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(33950)(43-13-14-37) குடும்பத்தினர்.

## திருமதி செல்லம்மா காசிவிசுவநாதன்

குருவீதி, மாவிட்டபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா காசிவிசுவநாதன் அவர்கள் நேற்று (08.07.2004) வியாழக்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து - நாகமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற காசி விசுவநாதனின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற தேவிகாராணி மற்றும் கணேசமூர்த்தி, லோகநாயகி, சிறீஸ்கந்தராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும் வேல்முருகன், இராஜசேகரன், புவனராணி, நடராசலிங்கம், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஈசானி, பாலமுராரி, பிரகாஷ் மீரா, கஜபதி, இமயவன், நர்மதா, மதுசூதனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2004) பிற்பகல் 4.00 மணியளவில் அவரது தற்போதைய வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து.நடராசலிங்கம்
(மருமகன்).

*"ரவீமனை"*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* *(33952)(37-13-14)*

## திருமதி கந்தையா செல்லம்மா

கைதடியைப் பிறப்பிடமாகவும் இராச வீதி, தோப்பு, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா அவர்கள் நேற்று (08.07.2004) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் திரு.திருமதி குருநாதர் தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையாவின் பாசமிகு மனைவியும் கோப்பாய் தெற்கு இளையதம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும் திருமதி செல்லத்துரை பாக்கியத்தின் மைத்துனியும் புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரி, துரைராசா (கிராம அலுவலர் J/282), இராசேஸ்வரி, சர்வேஸ்வரி, புவனேஸ்வரன் (கிராம அலுவலர் - கிரான், மட்டக்களப்பு), விக்னேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகராசா, சோதிலிங்கம், ஜெயமணி (ஆசிரியை), கலச் கணநாதன், சச்சிதானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் உதயபாலன், தவபாலன், தனுஷன், கார்த்திகாஜனி, காலஞ்சென்ற சாருஜன் மற்றும் ஜெயப்பிரதாப், கீர்த்தனா, ஜஸ்மிலா, உஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2004) சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்துமயானத்தற்கு எடுத்துச்செல்லப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
துரைராசா (மகன்)
(கிராம அலுவலர் J/282)

*இராச வீதி, தோப்பு,*
*அச்சுவேலி.* (33948)(43-13-14-37)

# ஜப்பானியக்குழு வருகை

குடாநாட்டில் விவசாயம் மற்றும் கடற்றொழில் என்பவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஜப்பானிய தூதரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு நேற்று ஆராய்ந்தது. ஜப்பானியத் தூதரக முதன்மைச் செயலாளர் யோசி இவாசிடா, இரண்டாவது செயலாளர் மசாகியு யகூடா, ஜப்பானிய தேசியக கூட்டுத்தாபன முகவர் அமைப்புக்கான வதிவிடப்பிரதிநிதி கோகொடோ மற்றும் வதிவிட சிரேஷ்ட ஆலோசகர் டாக்டர் சபாபதி முதியான் சலாகே புஞ்சிபண்டா அடங்கிய குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது (ஐ-31)

## நீர்வேலி மேற்கு மாலை வைரவர் தேவஸ்தானம்



### வருடாந்த பொங்கல் உற்சவம் – 2004

எமது ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை(10.07.2004) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு விஷேட பூசைகளும் வழிபாடுகளும் நடைபெறும். அடியார்கள் யாவரும் மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வைரவப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(33944) (43-13-14-37) ஆலய பரிபாலன சபையினர்.

## அறிவித்தல்

மக்கள் வங்கி, யாழ் பல்கலைக்கழகம்

எமது வாடிக்கையாளர்களின் நன்மைகருதி 10.07.2004 தொடக்கம் சனிக்கிழமைகளிலும் திருநெல்வேலிச் சந்தியில் அமைந்துள்ள எமது நீடித்த கருமபீடம் அடகுச்சேவை உட்பட வங்கியில் பணவைப்பு நடவடிக்கைகளுக்காக வங்கி திறந்திருக்கும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

*(சி-36102)(37-13-14)* - முகாமையாளர்.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**aat** Stage 1&2

கற்கைநெறிக்கான விரிவுரைகள் (English &Tamil)

ஆரம்பம்: Stage 1- 10.07.2004 சனிக்கிழமை காலை 8.00 மணி

Stage 11- 10.07.2004 சனிக்கிழமை காலை 11.00 மணி

*வார நாள் வகுப்பு* 12.07.2004 மாலை 3.00 மணி

மேலதிக விவரங்களுக்கு:

__Director__

*Jaffna College Undergraduate Dept.*

464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். *(சி36282)(37-13-14)*

## கண்ணீர் அஞ்சலி



### ஆறுமுகம் சிவராசா

(உரிமையாளர், மல்லிகா மிக்ஷர், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், மல்லிகா மிக்ஷர் தொழிலகம், சுழிபுரம், மானிப்பாய்.)

அவர்கள் 07.07.2004 அன்று காலமானதையிட்டு நாம் துயரமடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத தெரிவித்து, அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

89/6, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். - சண்முகம் குடும்பத்தினர்.
(33949) (43-13-14-37)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*மலர்வு* 17 – 10 – 1961



*உதிர்வு* 09 – 06 – 2004

### திருமதி ஜீவா இரத்தினேஸ்வரன்

எங்கள் அன்னையே! நடுவழியில் போனதேன்?
நாங்கள் காலமெல்லாம் கலங்குவதற்கா?
இறைவனடி சேர்ந்த எம் குல விளக்கே !
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அரியாலை மத்தி,*
*அரியாலை.* (33946)(43-13-14-37) - குடும்பத்தினர்.

## கலைவாணி கல்வி நிறுவனம்
கோப்பாய்

ஆசிரியர் போட்டிப்பரீட்சை ஜூலை
**விசேட வகுப்புகள்**
காலம் (10.07.2004) சனிக்கிழமை
பி.ப 5.00 மணிக்கு
ஆசிரியர் P. உமாசங்கர்

A/L Paper Class 2005
**CHEMIST.**
திரு. பவான் (B.Sc.)
ஆரம்பம்: (10.07.2004) சனி பி.ப.2.00
(சி36103)(37)

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## கேள்விப் பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கீழ்வரும் மரத் தளபாடங்களை வழங்குவதற்குத் தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| 1. கண்ணாடி முகப்பிலான அலுமாரி | 06 |
| 2. காரியாலய மேசை | 24 |
| 3. ஆய்வுகூட ராக்கை | 02 |

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப்பணமாக ரூபா 1000/- உம் மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாக ரூ.5000/- உம் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன், சிரேஷ்ட உதவி நிதியாளரிடம் (விநியோகம்) தொடர்புகொண்டு கேள்விப்பத்திர ஆவணங்களை 12.07.2004 தொடக்கம் 16.07.2004 ஆம் திகதிவரை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் *நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி* என முகவரியிடப்பட்டு 22.07.2004 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மரத் தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரம் No:UJ/PO/T/08/2004 " எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் பி.பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். .கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் சமுகம் தரலாம்.

துணைவேந்தர்,
(சி363101)(37-13-14) யாழ். பல்கலைக்கழகம்

## கண்டெடுக்கப்பட்டுள்ளது


பருத்தித்துறை, கொடிகாமம் வீதியில் சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம்.
(33943) (43-13-14-37)


வாழ்க வளமுடன்

ஒரு வருட பூர்த்தியில் மயூரா அன்பளிப்பகம்
யாழ். மண்ணில் அகவை ஒன்றைப் பூர்த்திசெய்யும்

MAYOORA GIFT CENTRE
மயூரா அன்பளிப்பகம்



தங்களிற்கு ஆதரவு நல்கிய அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களிற்கு தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றார்கள்.

இந்தியா, மலேசியா, டுபாய், சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் மங்கையருக்கான அழகூட்டும் மெருகூட்டும் பொருள்கள் நவீன கோல்ட் கவரிங் நகைகள் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய

உங்கள் நண்பன்
மயூரா கிவ்ட் சென்ரர்

இல14, நவீன சந்தை (வெளிப்புறம்),
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P :021222 2084 (33947)(32-13-14-37)

ராஜா யாழ்ப்பாணம்

அர்ஜீன், அபிராமி, மணிவண்ணன்,
பிரகாஸ்ராஜ் நடித்த
வானவில்
(ரீல்ஸ்)
தினசரி: 10.30,2.30,6.30,9.30 (பு.நே)
(C/35994)(37)

நிறைஞ்சனாஸ் சங்கானை



விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
SHE [இரவு 8.45]
(C-35653)(37)

நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், அமோகா, பூஜா, தாமு
நடித்த



ஜேஜே
தினசரி:
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/35739) (37)

# புலிகளால் அச்சுறுத்தலில்லை இறுதிமூச்சுவரை உறவிருக்கும்

## மகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

"தமிழீழ விடுதலைப் புலிகளால் எனக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை. எனது உடலில் இறுதிமூச்சு இருக்கும்வரை எனக்கும தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவைப் பலவீனப்படுத்தமுடியாது. சில அரசியல் கத்துக்குட்டிகள் எனது பொதுவாழ்க்கைக்கு மாசு கற்பிக்கும் வகையில் பேசித்திரிகின்றனர். தம்மை வளர்த்துக்கொள்ள லாயக்கற்றவர்களே அவர்கள். இப்படி கேவலமான முறையில் அரசியல் விளம்பரம் தேடுபவர்களை மக்கள் இனம் கண்டுகொண்டுள்ளனர். எனவே அவர்களைப்பற்றி அலட்டிக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை"

முன்னாள் இந்துகலாசார அமைச்சரும் ஐ.தே. கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் இப்படிக் கூறினார்.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மகேஸ்வரன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

இப்போது அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா என்னுடைய அரசியல் எதிரியாக இருக்கலாம். ஆனால் அப்பட்டமாக அவர் என மீது பழிபோடமாட்டார். தற்போது இந்துகலாசார அமைச்சுக்கு அவர் பொறுப்பாக இருக்கின்றார். அங்கே சகலவிதமான பதிவேடுகளும், ஆவணங்களும் இருக்கின்றன. அரசாங்கம் வழங்கிய நிதியோடு எனது சொந்தப்பணத்தையும் சமய வளர்ச்சிக்காக செலவிட்டுள்ளேன் என்பது அவற்றைப்பார்த்தால் தெரியும். எனது சம்பளத்தைக்கூட பொதுஅமைப்புக்களுக்கு வழங்கி வந்துள்ளேன். இதையாரும் மறுக்கமுடியாது.

எனது இரண்டு வருடகால சேவையில் வடக்கு - கிழக்கு, மலையகம், கொழும்பு என நாட்டின் பலபாகங்களுக்கும் சமய, சமூகப பணிகளைச் செய்துள்ளேன். இதனால் கொழும்பு வாழ் தமிழ்பேசும் மக்கள் என்னை வெற்றியடையச்செய்தனர். மாகாணசபைத்தேர்தல்களிலும் மக்கள் இதனை நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

பொதுத் தேர்தலின்போது ஜிந்துப்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்முதல் என்னைக் கொலை செய்வதற்கு வேவு பார்க்கப பட்ட சம்பவம்வரை விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறியுள்ளனர். இவர்களுடைய ஆலோசனையின் பேரிலேயே நான் தற்காலிகமாக வெளிநாடு ஒன்றில் தங்கியிருக்கத் தீர்மானித்துள்ளேன். இதைப்புரிந்து கொள்ளாத சிலர் ஏதேதோ கதை விடுகின்றனர்.

நான் வெளிநாட்டில் நிரந்தரமாகத் தங்கி விடப்போவதில்லை நான் எங்கிருந்தாலும் எனது பணி தொடரும்.

- இவ்வாறு மகேஸ்வரன் எம்.பி கூறினார்.

எனது பணி தொடரும். மகேஸ்வரன் எம்.பி. இவ்வாறு மேலும் கூறினார்.

அவர் அமைச்சுப் பதவியில் இருந்த இரண்டு வருட காலத்தில் தம்மால் மேற்கொண்ட சேவைகளையும் பட்டியல் போட்டுக் காட்டினார்.

## குற்றச்சாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 8மணிவரை தங்கியிருந்து தாம் தமது பணிகளைச் செய்தார் என்கிறார் பிரதம நீதியரசர்.

நேர்காணலுக்கு வந்த பலருடன் தாம் கலந்துரையாடினார் என்றும் -

அதன் பின்னர் நாரஹென்பிட்டிய பொலீஸாரின் பாதுகாப்போடு தாம் வீட்டுக்குச் சென்றார் என்றும் -

வழியில் சிலபொருள்களைக் கொள்வனவு செய்தார் என்றும் -

பிரதம நீதியரசர் சில்வா கூறுகின்றார்.

அதன் பின்னர் இரவு முழுவதும் தாம் வீட்டிலேயே தங்கியிருந்தார் என்றும், வெளியே எங்கும் செல்லவில்லை என்றும் கூறும் பிரதம நீதியரசர், அதனை நாரஹென்பிட்டிய பொலஸார் உறுதிப்படுத்துவர் என்றும் குறிப்பிடுகின்றார்.

உயர்நீதிமன்றத்தின் முன்னால் பல முக்கிய வழக்குகள் நிலுவையில் இருக்கையில், தம்மை அகௌரவப்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக ஆதாரம் - அடிப்படை - ஏதுமற்ற இந்தக் குற்றச்சாட்டு இருக்கலாம் என்று பிரதம நீதியரசர், பொலீஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார். (க)

## கொழும்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடங்கள் அமைந்திருக்கும் பகுதிகளிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி நிலையத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பலியான சிரேஷ்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஏக்கநாயக்கா தமக்கு அண்மையில் கிடைத்த பதவிஉயர்வு தொடர்பான கடிதத்தை எடுத்துச் செல்வதற்காக அந்த இடத்துக்கு வந்தபோதே குண்டு வெடிப்பில் சிக்கிக் கொண்டார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-3)

## பொலீஸ் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவலரண்கள் அமைக்கப்பட்டு ஆயுதம் தாங்கிய படையினர் காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், மோட்டார்சைக்கிள் பொலீஸ் அணியினர் நகர் முழுவதும் ரோந்துப் பணியை தீவிரமாக்கியுள்ளனர்.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தை அடுத்து பிரதமர் மற்றும முக்கிய அமைச்சர்களுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மோ.சைக்கிளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடன் சிக்கி விபத்துக்குள்ளானதாகவும் கூறப் படுகின்றது.

வீதியில் தலையடிபட வீழ்ந்ததில் படுகாயமடைந்த பெண் உடனடியாக யாழ்.வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனளிக்காமையினால் அவர் அங்கு உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பொருட்டு யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-9-6-15)

## மழையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கு அவரை நன்கு தெரிந்திருக்கின்றது எனவும் கூறப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வந்த சத்தியலீலாவதி, டாம் வீதியில் தங்கியிருந்தார் என்றும், அவர் தங்கியிருந்த லொட்ஜ் பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரால் சோதனை செய்யப்பட்டது என்றும் தெரியவருகின்றது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தியவர் என்று கூறப்படும் பெண்ணை, அமைச்சர் டக்ளஸின் அலுவலகத்தில் வைத்தே முதன் முதலாகத் தாம் கண்டார் என்றும், அதற்கு முன்னர் அந்தப் பெண்ணைத் தாம் கண்டதேயில்லை என்றும் பொலீஸாரிடம் கைதாகியுள்ள சத்தியலீலாவதி தெரிவித்திருக்கின்றார்.

மேற்படி தற்கொலைத் தாக்குதல் நடத்திய இளம் பெண்,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தை விட்டு வெளியேறி வந்த சமயம் திடீரெனப் பெய்த மழையின் போது அவர் ஒதுங்குவதற்கு சத்தியலீலாவதி தனது குடையில் இடமளித்தார் என்றும் -

அதனாலேயே புலனாய்வாளர்களின் சந்தேகப் பார்வை அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளது என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க-9)

## 13 இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்திகள், கோடாரிகள், பேஸ்பந்து மட்டைகள, ஹொக்கி மட்டைகள் போன்றவற்றைப் பொலீஸா கைப்பற்றியுள்ளனர்.

தமிழ்ச்சமூகத்தில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு எதிரான நடவடிக்கைகளின் ஒரு பகுதியே நேற்றைய சோதனை என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையில் 250 இற்கும் மேற்பட்ட பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவற்றைத் தவிர பலவகையான கிரெடிக் கார்டுகள், வெற்றுக்காசோலைகள் மற்றும் ரொக்கப்பணம் என்பனவற்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.தமிழ்ச் சமூகத்தினரிடையே அச்சுறுத்த லைக் குறைக்க 'ஸ்கொட்லண்யாட்' பொலீஸார் இத்தகைய நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர். (ஐ-9)

## பிரதம நீதியரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் பிரதம நீதியரசருக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகிறார்கள் என அர்த்தம்.

மாறாக, பொலீஸார் தெரிவிப்பது உண்மையானால் பிரதம நீதியரசர் வெளியிட்ட கருத்தானது அவரது பதவிக்குரிய கௌரவத்தைப் பாதிக்கும் நடவடிக்கையாகிறது.

எனவே, இவ்விடயம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டியது அவசியமானதாகும்.

மேலும் உயர்நீதிமன்றத்தில் சில வழக்கு விசாரணைகளை எதிர் நோக்கியிருக்கும் குழுவே இத்தகைய புரளியைத் தமக்கு எதிராகக் கிளப்பி விடுகின்றது என்றும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டுள்ளார். அதையும் பிரதம நீதியரசர் தெளிவுபடுத்த வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சி கேட்டிருக்கின்றது.

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விகாரை மீது நேற்று இரவு கைக்குண்டுத தாக்குதல் நடத்தப்பட்டது. கருணா குழுவினர் பதுங்குவதற்கு இடமளித்த விகாராதிபதியே காயமடைந்தார். இவர் கடந்த பொதுத் தேர்தலில் தீவிர சிங்களப் போக்குடைய ஜாதிகஹெல உறுமயவின் பட்டியலில் ஏனைய பிக்குமாருடன் சேர்ந்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

இவரது இந்த விகாரைக்கு அருகில் இராணுவத்தின் விசேட படைப் பிரிவு ஒன்று முகாமிட்டிருப்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-9)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம் சிறீதரன்(வயது 23), பன்குடா வெளியைச்சேர்ந்த தில்லையம்பலம் சுந்தரராஜன் (வயது 24) ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ரி - 56 ரகத்துப்பாக்கி - 1 , கிரனேட்டுக்கள் - 2, 9 மி.மீ பிஸ்ரல் - 1, கையடக்கத் தொலைபேசி - 1 , கிளைமோர் - 1, மகஸின் - 3, முதலுதவிப் பொருள்கள் - ஒரு தொகை, வயர்கள் ஆகியனவும் இலுப்பையடிச் சேனையில் நேற்று மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

அங்கு சமுகமளித்திருந்த ஊடகவியலாளர்களிடம் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் தெரிவித்ததாவது:-

புலிகளின் மகளிர் தங்குமிடம், நிர்வாகச் செயலகம் ஆகியன மீதான தாக்குதலைத் தாமே நடத்தினர் என்பதை இவர்கள் இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இராணுவத்தினரின் உதவியுடனேயே இவர்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்பது நூறுவீதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களிடம மீட்கப்பட்ட ஆயுதங்கள் இராணுவத்தினர் பயன்படுத்தும் ஆயுதங்களின் ரகத்தைச் சேர்ந்தவை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இராணுவத்தின் உதவியுடன் கருணா இவர்களை ஆசை வார்த்தை காட்டி, உள்வாங்கி, எம்மீதான தாக்குதலை நடத்தி வருகிறார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எம் மீது தாக்குதல்களை நடத்த இராணுவ உதவியுடன் கருணா முயற்சி மேற்கொண்டு வருகிறார். இத்தகைய தாக்குதல்களை நடத்துவதற்காக ஊடுருபுபவர்களைக் கண்காணித்து வருகின்றோம். இத்தகையவர்களை இனம் காண மக்கள் தகவல் தந்து உதவவேண்டும் என்று கூறினார்.

இந்த மரண தண்டனை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த்தேசியத்தையும், தமிழரின் உரிமைப் போராட்டத்தையும் வலுவிழக்கச் செய்யும் வண்ணம் கருணாவின் கைக்கூலிகளாக, ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வாளர்களின் உதவியுடன் - செயற்பட்ட இருவருக்கு இலுப்பையடிச் சேனைச் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

இலுப்பையடிச் சேனையைச் சேர்ந்த பா ம சுந்தரம் சிறீதரன் (வயது 23) என்பவருக்கும், பன்குடா வெளியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுந்தரராஜன்(வயது 24) என்பவருக்குமே இத்தண்டனை வழங்கப்பட்டது.

பணத்திற்காகவும், அற்பஆசைக்காகவும், தேசவிரோத சக்திகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசியத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் தமது பிள்ளைகளை ஈடுபடாமல் பார்க்குமாறு பெற்றோரைக் கேட்டுக்கொள்கிறோம்.

அத்தோடு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலிருந்து எமது அமைப்பில் இணைந்து இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் எதுவித அச்ச உணர்வுமின்றி தங்கள் பெற்றோருடன் இருந்து கல்வி, பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதேவேளை, தமிழ்த்தேசியத்துக்காக பற்றுணர்வுடன் செயற்பட விரும்புவோர் எமது தாயக மீட்பில் அக்கறை கொண்டு தங்கள் சுயவிருப்பின் பேரில் எம்முடன் இணைந்து செயற்படலாம் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ...)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை
புதிய பிரிவுகள்
சனி, ஞாயிறு, வார நாள்கள் காலை 9மணி முதல் ஒவ்வொரு பிரிவும் 30 மணித்தியாலங்கள்
ஆரம்பம்: 10-07-2004 சனி காலை 9மணி
மேலதிக விவரம் அலுவலகத்தில் பெறவும்
நியூட்டன், ஆரியகுளம் சந்தி, யாழ்நகர். (33918)

மொபைல் கொம்பியூட்டர் சேவீஸ்
P.V mobile services T.P 0773024455
உங்கள் வீட்டுக் கொம்பியூட்டரிலேயே INTERNET CALL இணைப்பு மிகக் குறைந்த கட்டணத்தில் (நிமிடத்துக்கு 4/=)
புதிய OPPERATING SYSTEM, OFFICE உள்ளீடு செய்தல் (WIN 98- WIN XP 2004, M-S OFFICE 2000-2003)
புதிய சொவ்ற்வெயர் (Software), ஹாட்வெயர்(Hardware) உள்ளீடு(INSTALLING) செய்தலும், திருத்துதல்(REPAIRING) செய்தலும்.
புதிய தமிழ் OFFICE, தமிழ் TYPING மென்பொருட்கள்.
குறைந்த கட்டணத்தில் விரைவு சேவை வழங்கப்படும் அழையுங்கள். 0773024455
கொம்பியூட்டர் கல்வி [வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்]
MS OFFICE 2003 XP
WINDOWS XP 2004
DESKTOP PUBLISHING
HARDWARE COURSE
PHOTOSHOP, PAGEMAKRER, FLASH MX
VIDEO EDITING & MUSIC LOOPING, & CREATING
INTERNET & E MAIL
ஆசிரியர் யாழில் முதல்முறையாக
Printed tutes
மிகக் குறைந்த கட்டணத்தில் தமிழ் அறிக்கைகள் புத்தகங்கள் Type Setting
QUICK MOBILE SERVICE & RESONABLE CHARGE

ஸ்ரான்லி றோட், D.C.A யாழ்ப்பாணம்
யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
கல்வியாண்டு 2005
1st in Com., G.A.Q. நாளை ஆரம்பம்.
வகுப்புக்கள் யாவும் வெலிங்டன் சந்தி D.M.I நிறுவனத்தில் நடைபெறும்
(33837)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர், IIS
100, Clock Tower Rd., Jaffna.
(C-36203)

இன்று முதல் 3 நாட்களுக்கு
திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
12 ஆண்டுகளுக்கு முன்னர் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் யாழ்நகரில் மேடையேற்றப்பட்டு அனைவரது மனங்களிலும் நிறைந்து, பாராட்டுக்களைப் பெற்ற 'ஞானசௌந்தரி' மீண்டும் மேடையேறுகின்றாள்.
காலம் : ஜூலை 9,10,11-2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம் : மாலை 7.00 மணி
இடம் : திருமறைக்கலாமன்ற அரங்கு
அன்பளிப்பு - 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 2393
(சி-36244)(32)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.